பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
'கஜபதி' (28523)

# உதயன்

விலை ரூபா 5-00

நினைவுகள் மறப்பதில்லை
'கஜபதி' (28523)

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 17 சனிக்கிழமை (01 - 01 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 36

# இவ்வருடத்தில் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்து விடுவாராம்!

## விஜேதுங்கா புதிதாகச் செய்தி

கொழும்பு, ஜனவரி 1

இன்று பிறக்கும் புதிய வருடத்தில் பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்துவிடப் போவதாக ஜனாதிபதி டி பி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்-

பயங்கரவாதத்தை முழுமையாக நீக்குவதற்கும், தற்போதைய பிரச்சினைக்குக் காலம் தாழ்த்தாமல் தீர்வு காண்பதற்கும் நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன் என்று அவர் நேற்று விடுத்த புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வருடத்தில் நீதியும் அமைதியும், ஸ்திரத்தன்மையும் கொண்ட இலங்கையை உருவாக்குவது தமது புத்தாண்டுக் குறிக்கோள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு புத்தாண்டில் மக்கள் ஐக்கியப்படவேண்டும். ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு மக்கள் தங்களைப் பூரணமாக அர்ப்பணிக்க வேண்டும்.

சாதி, சமயம், இனம், சிறிய அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைத்து இலங்கையரும் ஐக்கியத்துடன் செயற்படவேண்டும்.

சிங்கள மக்கள் தமிழர்களுடன் சிறந்த நல்லுறவை ஏற்படுத்த விரும்புகிறார்கள். அதற்குத் தடையாக உள்ளது பயங்கரவாதமே. அதனை நான் ஒழிப்பேன்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் என்றென்றும் எமது நண்பர்கள், நாங்கள் இரு சாரரும் பல நூற்றாண்டு காலமாக ஒட்டி உறவாடி ஐக்கியமாக வாழ்ந்துள்ளோம்.

இந்தச் சகோதர பாசத்துக்குத் தடை போடும் பயங்கரவாதத்தை முழுமையாக நீக்க வேண்டும் — என்று தெரிவித்துள்ளார். (அ-எ-6)

### மற்றொருவர் பலி

நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற புக்காரா விமான ரொக்கட் தாக்குதலில் இறந்தோர் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

தாக்குதலின் போது காயம் அடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த அல்லாரையைச் சேர்ந்த சி. கிருஷ்ணசாமி (வயது 54) என்பவர் நேற்று மரணமானார்.

### ஹெலித் தாக்குதல்

நேற்றுக் காலை 11 40மணியளவில் ஹெலி ஒன்று கிழக்கு அரியாலைக்கும் — கௌதாரி முனைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பிலும் தரையை நோக்கியும் சுமார் 20 நிமிட நேரம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

## தச்சன்தோப்பில் விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 1

நேற்று நண்பகல் 12.40 மணியளவில் இரு குண்டு வீச்சு விமானங்கள் தச்சன் தோப்பு, கோவிலாக்கண்டி, மணித்தலை ஆகியபகுதிகளில் குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தின.

விமானங்கள் நேற்று பரவலாக தென்மராட்சிப் பகுதிகளை வட்டமிட்டன. இதனால் தென்மராட்சியில் பதற்றம் நிலவியது காலை 9.30 மணியளவில் ஹெலி ஒன்று சாவகச்சேரி பகுதியை சுற்றி வட்டமிட்டது. [உ-3]

## சாவகச்சேரியில் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு

### கடைகள் மூடப்பட்டன

நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று சாவகச்சேரியில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

சன நடமாட்டம் குறைந்து நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

நேற்று விமானங்கள் அடிக்கடி பறந்தபோது மக்கள் பதற்றம் அடைந்தனர். (இ 117-31)

## இரணைமடுக் குளம் உடைக்கும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜன. 1

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் அணையின் நடுப் பகுதியில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதால் அதன் மீது வாகனப் போக்குவரத்து மேற்கொள்ளக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையால் இக்குளத்தின் மடைக் கதவுகளில் அரிப்பு ஏற்பட்டுள்ளதாலும் -

அணைக்கட்டின் மையப் பகுதியில் அரிப்பு ஏற்பட்டுள்ளதாலும்— அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது. அதனை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி பெய்த கடும் மழை காரணமாக நீர் மட்டம் 35 அடி ஆக உயர்ந்துள்ளது. அப்போது சகல மடைக் கதவுகளும் திறந்து விடப்பட்டன.

இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு உடைக்கும் பட்சத்தில், அதன் அருகில் உள்ள 25 ஆயிரம் குடும்பங்கள் பெரு அழிவுகளை சந்திக்க நேரிடும் என்றும்—

21 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான விவசாய நிலப்பரப்பு அழிய நேரிடும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## தாயும் மகனும் நித்திரையில் பாம்பினால் கடியுண்டனர்

### ஆஸ்பத்திரி செல்லும்வழியில் மகன் பலி

தென்மராட்சி, ஜன. 1

இரவு உணவு அருந்திய பின்னர் படுத்திருந்த தாயும் மகனும் பாம்பினால் தீண்டப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் பளை சோரன்பற்று மாசாரில் இடம்பெற்றது.

பாம்பினால் தீண்டப்பட்ட இருவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மகன் மரணமானார். தாயார் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சோரன்பற்று மாசாரைச் சேர்ந்த தர்மசிங்கம் தர்சிகன் (வயது 5) என்பவரே மரணமானவராவார்.

இவரது தாயாரான தர்மசிங்கம் பாக்கியவதி (வயது 34) ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும்

உதயனின்
இதயமார்ந்த
இனிய
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உரியனவாகுக!

## குமுழமுனையில் புக்காரா குண்டு வீச்சு!

### இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம் ஜன 1

முல்லை. மாவட்டத்தின் மணலாற்றுப் பகுதியில் உள்ள குமுழமுனைக் கிராமத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற புக்காரா விமானத் தாக்குதலில் இளம் பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

திருச்செல்வம் சச்சுதானந்தி (17 வயது) என்பவரே கொல்லப்பட்டவராவார.

இத்தாக்குதலில் இரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. (இ-3)

## துன்பத்தின் மத்தியிலும் இறைவனை நினைப்போம்

### யாழ். ஆயர் புத்தாண்டு செய்தி

யாழ்ப்பாணம், ஜன 1

போரின் கோர விளைவுகளும் இயற்கையின் அனர்த்தங்களும் எம்மவர்க்கு சொல்லொணாத் துன்பத்தை விளைவித்துள்ளன.

இவற்றின் மத்தியிலும் இறைவனின் பராமரிப்பையும் அருட் கொடைகளையும் நினைக்காமல் இருக்க முடியாது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தமது 1994 புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

புலர்ந்திருக்கும் இப்புதிய புத்தாண்டில் நாம் அனைவரும் விரும்புவது சமாதானமே.

உலக சமாதானத்தின் தினத்தில் எமது பரிசுத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபை கலைப்பு; தேர்தலுக்கு உடன் வேட்புமனு

கொழும்பு, ஜன. 1

தென் மாகாணசபை கலைக்கப்பட்டது. இது தொடர்பான உத்தரவை ஆளுநர் டாக்டர் எல். எம். ஜபரத்தினா கடந்த வியாழக்கிழமை பிறப்பித்தார்.

இதேவேளை கலைக்கப்பட்ட மாகாண சபைக்குரிய தேர்தலை நடத்துவதற்காக இன்னும் ஒரு வாரத்திற்குள் நியமனப் பத்திரங்கள் கோரப்படும் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்திருக்கிறார்.

தென்மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் கடந்த மாதம் 30 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வரவு — செலவுத் திட்டக் கூட்டம் நடைபெறாமல், முதலமைச்சர் தொடங்கொட இடைக்காலக் கணக்கறிக்கையை மட்டும் சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து சபையைக் கலைக்குமாறு தாம் ஆளுநரிடம் கோரப் போவதாக எதிர்க் கட்சித் தலைவர் அமரசிறி நேற்று முன்தினம் கூறியிருந்தார். அதன் தொடர் நிகழ்வாக புதிய ஆளுநர் ஜபரத்தினா அன்றிரவே சபையைக் கலைத்துவிட்டார்.

தென் மாகாணசபையின் வரவு-செலவுத் திட்டம் கடந்த 23 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படவிருந்த வேளையில் —

அதற்குச் சில தினங்களுக்கு முன்னதாக ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த உறுப்பினரான விமல் பிரான்சிஸ்கு கடத்தப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து சபையின் கூட்டம் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது

மாகாணசபைத் தேர்தல் மே மாதத்தில் நடந்தபோது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் சேர்த்து கிடைத்த ஆசனங்களை விட ஓர் ஆசனம் குறைவாகவே கிடைத்தது எனினும் அப்போதைய ஆளுநர் பாக்கீர் மாக்கார் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த எம் எஸ். அமரசிறிக்கு முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கலைப்பை எதிர்த்து வழக்கு

கொழும்பு, ஜன 1

தென் மாகாணசபையை அதன் ஆளுநர் கலைத்ததை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக அந்தச்சபையின் முன்னாள் முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட நேற்றுத் தெரிவித்தார். (உ-3 6)

### ராஜினாமாவை ஏற்க மறுப்பு

புதுடில்லி, ஜன. 1

நிதி அமைச்சர் டாக்டர் மன்மோஹன் சிங்கின் ராஜினாமாவை பிரதமர் நரசிம்மராவ் ஏற்க மறுத்து விட்டார்.

பங்குப் பேரச்சந்தை ஊழல் விவகாரம் தொடர்பாக வெளியான கூட்டு நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து டாக்டர் மன்மோஹன்சிங் ஒரு வாரத்திற்கு முன்பு தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்திருந்தார். (உ எ)

## சிப்பாய்கள் களைத்து விட்டனர்; சமாதானத்தை விரும்புகின்றனர்!

### கருத்தரங்கில் தகவல்

கொழும்பு, ஜன. 1

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தினால் இராணுவச் சிப்பாய்கள் களைத்து விட்டனர். அவர்களும் சமாதானத்தையே விரும்புகின்றனர்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 'சமாதானத்துக்கான பாதை' என்ற கருத்தரங்கில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கருத்தரங்கில் உரை நிகழ்த்தியவர்களில் ஒருவரான திரு. றெஹான்பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது பேச்சின் ஒரு கட்டத்தில் பின்வருமாறு தெரிவித்தார்:-

கடந்த வாரம்இலங்கை ஆதயுதப்படையினரில் நடுத்தர அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுடன் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

தற்போதையயுத்தத்தினால் சிப்பாய்கள் களைத்து விட்டனர். அவர்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர். அரசாங்கம் வழங்கும் எந்தத் தீர்வையும் ஏற்க அவர்கள் தயாராக இருக்கின்றனர் — என்றார்.

வண. பத்தேகம சமித்த தேரர் தமது பேச்சின் ஒரு கட்டத்தில் —

இராணுவத்தில் உள்ள தமது புதல்வர்கள் சுகமாக வீடு வந்து சேர வேண்டும் என்று நேர்த்தி செய்து அவர்களின் தாய்மார் பலர் எனது விகாரையில் உள்ள! அரச மரத்தில் மஞ்சள் கொடியை கட்டுகின்றனர் —

இந்த யுத்தம் முடிய வேண்டும்; தமது பிள்ளைகள் தம்மிடம் வந்து சேரவேண்டும் என்றே சிப்பாய்களின் தாய்மார் என்னிடம் தெரிவிக்கின்றனர்.

அவர்களுக்கு இந்த யுத்தம் பெரும் துன்பமாகவே உள்ளது. — என்றார்.

''அமைதிக்கான பாதை'' என்ற இக்கருத்தரங்கு சம்பந்தமான விரிவான செய்தி ஏற்கனவே உதயனில் வெளியானது. (அ-எ)

## திருமலையில் இருந்து மா அனுப்ப மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 1

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை நீக்க திருகோணமலையில் இருந்து மா அனுப்ப மாற்று ஏற்பாடு செய்வது குறித்து புனர்வாழ்வு அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து சென்ற ''மாஹேரா'' கப்பல் தற்சமயம் திருகோணமலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பிரிமா ஆலையில் மா கையிருப்பில் வந்ததும் அவற்றை ''மாஹோ'' கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். இது சாத்தியப்படாவிட்டால் கொழும்பில் இருந்து லொறி மூலம் மாவை திருமலைக்கு அனுப்பி ''மாஹோ'' கப்பலில் ஏற்றுவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

கொழும்பில் தொடரும் மழை காரணமாக, கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ள 'வாதுவ' கப்பலில் பொருள்கள் ஏற்றுவது தாமதமாவதாகவும் —

அந்நிலையில் ''மாஹோ'' கப்பலை கொழும்புக்கு அனுப்புவதால் பயன் இல்லை என்பதாலேயே மாற்று ஏற்பாடு குறித்து ஆராயப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

### மூச்சந்தி முரளி



கையாடல் கணக்கு இப்ப

## நாளைய இ.தொ.கா. கூட்டம்; ஒத்திவைக்குமாறு கோரிக்கை

### தொண்டாவுக்கு செல்லச்சாமி கடிதம்

கொழும்பு, ஜன. 1

நாளை நடத்தப்படவிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டத்தை ஒத்திவைக்கும்படியும் —

15 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸின் பொலிட்பீரோவைக் கூட்டி, மத்திய மாகாணசபை நெருக்கடி தொடர்பான நிலைமையை விவாதிக்கும்படியும் — இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, இ.தொ.கா. தலைவர் எஸ் தொண்டமானைக் கேட்டுள்ளார்.

நடந்தது நடந்துவிட்டது. இப்போது இ.தொ.கா. வின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் பாதிக்கக்கூடிய நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம அனுமதிக்கக்கூடாது — இவ்வாறு திரு. செல்லச்சாமி திரு. தொண்டமானுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

''மத்திய மாகாணசபையில் அங்கம்வகிக்கும் இ.தொ.கா. உறுப்பினர்களில் ஏழு பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து பாரபட்சமற்றமுறையில் பரிசீலனை செய்வதற்கு தேசியசபை உரிய இடம் அல்ல.

முதலில் அரசியல் குழுவில் (பொலிற்பீரோவில்) இப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தொழிற்சங்கப் பணம்:

## 40 லட்சம் ரூபாவை தொண்டா கையாடியதாகக் குற்றச்சாட்டு

### செல்லச்சாமி பகிரங்கமாகச் சுமத்துகிறார்

கொழும்பு ஜன 1

இ.தொ.கா தலைவர் திரு. எஸ்.தொண்டமான் தொழிற்சங்கப் பணத்தில் சுமார் 40 லட்சம் ரூபாவைக் கையாடல் செய்துள்ளதாக இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ், செல்லச்சாமி தெரிவித்திருக்கிறார்.

நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், திரு. செல்லச்சாமி தொண்டமானுக்கு எதிராக ''ஊழல் நிர்வாகம் — உறவினர் பங்களிப்பு'' என்ற தலைப்பிலான ஊழல் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

இதனையடுத்து இ. தொ. கா. இரண்டாகப் பிளவுபடும் சாத்தியம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

இ.தொ.காவின் நிதிச் செயலாளராக தொண்டமான் பேரனான ஆறுமுகன் தொண்டமானை நியமித்தது முதல் தொழிற்சங்கப் பணமான சுமார் 40 லட்சம் ரூபாவை தொண்டமான் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தியுள்ளார் என்றும் செல்லச்சாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாளை நடைபெறவிருக்கும் இ.தொ.கா. தேசிய சபைக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்றும் —

பொதுச் செயலாளர் என்ற வகையில் தேசிய சபைக் கூட்டத்திற்கான அழைப்பை விடுக்கும் அதிகாரம் தமக்கே

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட, கோண்டாவில்.

## கல்வியாண்டு 1994

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையிலான வகுப்புக்கள் ஆரம்பம் 05 — 01 — 1994

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல், சண்

கணிதம்
இந்திரன், லோகேஸ்வரன், வாமதேவன், மகேந்திரன்

தமிழ்/சமயம்
பண்டிதர், சுந்தரலிங்கம், யோகராணி

சமூகக்கல்வி
வேலா, சிவனேசன்

ஆங்கிலம்
மகாலிங்கம், தர்மலிங்கம் ரமேஸ்

வர்த்தகம்
நவம்

அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/6852)

# அறிவித்தல்

## கொக்குவில் இந்து மயான அபிவிருத்தி சபையின்

## புதிதாகத் தயாரிக்கப்பட்ட யாப்பு

அங்கத்தவர்களின் பார்வைக்காக, நல்லூர்ப் பிரதேசசபை உப பணிமனை கொக்குவில் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருத்தங்கள் கொண்டுவருபவர்கள் அதனை 14-01-94இற்கு முன்னதாக எழுத்துமூலம் தலைவர் அல்லது செயலாளருக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தலைவர்,
பொ. யோகலிங்கம்,
பொற்பதி வீதி,
கொக்குவில்.

செயலாளர்,
சி. மாதவகுமாரன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(28683)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## கல்வியாண்டு - 1994

O/L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT - SUN CLASSES (8-00 — 1-00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | :- | திரு. J.R. சூரி |
| கணிதம் | :- | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வி | :- | திரு. கோபி |
| ஆங்கிலம் | :- | திரு. விஸ்வநாதன் |
| தமிழ் | :- | திரு. சிவா. திருப்பதி |
| வர்த்தகம் | :: | திரு. கருணாகரன் |
| சமயம் | :- | திரு. கங்கா, சங்கர் |

ஆரம்பம்: 06-01-1994 (வியாழன்) மாலை 3-15 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

(சி-6866)

# பதவி வெற்றிடம்

பதவி: வடிசாலை முகாமையாளர்.

சம்பளத்திட்டம் 48000 — 72000 / 4X1800 7X2400

கல்வித்தகைமை
இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர் அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் 15 வருடங்கள் அனுபவம் பெற்றவர்.

வயது: 25 — 50 வருடம்

குறிப்பு:

அ. சம்பளத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கான சகல அலவன்ஸ்களும் வழங்கப்படும்.

ஆ. கேட்கப்பட்ட கல்வித்தகைமைகள் இருந்தும் அனுபவம் இல்லாது இருப்பின் அல்லது கேட்கப்பட்ட அனுபவம் இருந்தும் கல்வித்தகைமை இல்லாது இருப்பினும் பொருத்தமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படும்.

இ. பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில் பிணைப் பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ''பொது முகாமையாளர், தென்மராட்சி, பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி'' என்ற விலாசத்திற்கு 10 - 01 - 94க்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் கடித மேலுறையில் பதவிக்குரிய பெயர் இடப்படல் வேண்டும்.

தலைவர்,
தென்மராட்சி,
ப தெ வ. அ. கூ. ச. கொத்தணி
பருத்தித்துறை வீதி,
வரணி.

(28681)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் நவரத்தினம் கருணானந்தம்

(பெரியவிளான் உதயசூரியன் சனசமூக நிலைய அங்கத்தவர்)

தோற்றம்: 14-08-1954 மறைவு: 03-12-1993

எமது இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எங்கள் நண்பர் கருணானந்தம் அவர்களின் மறைவு அவரின் நண்பர்களாகிய எமக்கு ஓர் பேரிழப்பாகும். மாதா வயிற்றில் இருந்து இந்த மண்ணில் விழும்போதே நாம் இறப்பது என்பது தவிர்க்கமுடியாத உண்மை என்பதை நாம் எண்ணிக்கொண்டு, அவரின் பிரிவால் துயருறும் பெற்றோர், மாமா, மாமி, மனைவி, பிள்ளைகள், அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

பெரியவிளான் உதயசூரியன்
விளையாட்டுக்கழக
அங்கத்தவர்களும், நண்பர்களும்.

(28708)

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 1

கோப்பாய் ஐந்தாம்கட்டை நவீன பாலர் பாடசாலையின் முதலாவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனி பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(த)

## அரச சேவைகள் செயலாளர் நியமனம்

கொழும்பு, ஜன. 1

திரு.எஸ். சிவானந்தன் அரச சேவைகள் செயலாளராக இன்று பதவி ஏற்கிறார்.

ஜனாதிபதி இந்த நியமனத்தைச் செய்திருக்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை 'ஏ' வகுப்பு தரம் 1 அதிகாரியான திரு.எஸ். சிவானந்தன் திருகோணமலை சம்மாந்துறை பகுதிகளில் காரியாதிகாரியாகவும்—

அம்பாறை, காலி மாவட்டங்களில் மேலதிக அரச அதிபராகவும்—

காலி மாவட்டத்தில் அரச அதிபராகவும் — கடமையாற்றியிருந்தார்.

[இ-எ]

# புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)

புலோலி கிழக்கு, பருத்தித்துறை

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ். மாவட்டத்திற்குள் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விவரங்களையும் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 1. பொது முகாமையாளர் பதவி 165/88 - 101/9

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர் தரம்)இல் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

சம்பளத்திட்டம்: 1405 — 2470 / 60 X 4 — 75 X 11
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

### 2. கணக்காளர் பதவி 165/88 - 104/10

தகைமைகள்:

அ) கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் அல்லது கணக்காய்வாளர் வேலையில் (3) மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் புத்தகம் பேணுதல், கணக்கு ஆய்வாளர் வேலையில் (ஆறு) 6 வருட அனுபவம்.

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தி அடைந்து ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்திலான (2) இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் / கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

இ) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க. பொ. த. (உயர்தரம்) சான்றிதழ் பரீட்சையில், கணக்கியல் பாடம் உட்பட மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் ஆறு (6) ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்: 1305 — 2005 / 40 X 5 — 50 X 10
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

### 3. அகநிலைக் கணக்காய்வாளர் 165/88 - 105/12

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 13ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்,

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர் தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 2வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

சம்பளத்திட்டம்: 1155 — 1685 / 30X7 — 40X8
இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

பொது வயதெல்லை:
25 — 45 வரை, கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

பிணைகள்:
கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணத்திற்கமைய செலுத்தப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 16-01-94ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர் செயலாளர்

30-12-93 (சி-6800)

# 'மாற்றம்' நடத்தும் தமிழ் விழா

இடம் : நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்.

காலம் : 01 - 01 - 1994 இன்று பி.ப. 3 மணி

- இசைச் சொற்பொழிவு
- 'மாற்றம்' ஆண்டு மலர் வெளியீடு
- தேசாபிமானி விருது வழங்கல் (உயர்திரு ஆ.சி. முருகுப்பிள்ளை அவர்களுக்கு)
- தீபநடனம்
- வாத்திய கானங்கள்

விளம்பர அன்பளிப்பு:
P. I. பெர்னான்டோ
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6869)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASS

மீட்டல் வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | பசில் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |

ஆரம்பம்: 03 - 01 - 94 திங்கள் 8 - 00 a m.

(சி/6838)

# முக்கிய அறிவித்தல்

உடுவில் மகளிர் கல்லூரி

1994 ஆம் ஆண்டுக்கான புதிய தவணை 03-01-1994 ஆரம்பமாகும்.

— அதிபர்.

(சி/6902)

# மாணவர்களுக்கு ஓர் புத்தாண்டுப் பரிசு

எடிசன் அக்கடமியின்

புதிய கிளை

ஆண்டு 4 முதல் O/L வரை

யாழ். பிரபல ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவையில் உதயமாகின்றது.

புதிய

## எடிசன் அக்கடமி

(கொக்குவில் இந்து—குளப்பிட்டிச் சந்தி இடையில்)
27, கே. கே. எஸ் வீதி. கொக்குவில்.

ஆரம்பம்
06-01-1994 பி ப 4 மணி

(சி/6901)

# புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

## INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE

ஆரம்பம்:- 05-01-1994

- தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகு விரிவுரைகள்.
- தவணை முறையில் கட்டணம்.

விவரங்களுக்கு:-

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.

(C/6880)

# 31ஆம் நாள் நினைவலைகள்

## திருமதி அமிர்தலிங்கம் மகாதேவி

பிறப்பு: 07-10-1945 இறப்பு: 02-12-1993

02-12-93 இல் சிவபதமடைந்த திருமதி அமிர்தலிங்கம் மகாதேவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 01-01-94 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வேளை உறவினர், அயலார், நண்பர்கள் அனைவரும் அவரின் நற்பேற்றுக்காக நடைபெறும் வழிபாட்டில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அமிர்தலிங்கம்,
பிள்ளைகள்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(28710)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறையைக் கண்டித்து மக்கள் மறியல் போர்;

# மணலாறில் அதிரடித் தாக்குதல் நடத்தி புலிகள் சாதனை

## பெப்ரவரி

பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் குடாநாட்டில் பெரும் பஞ்ச நிலை ஏற்பட்டிருந்தது. உணவுப் பொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடும், விலையுயர்வும் இருந்தன. தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் நிலை தோன்றியது.

அதேநேரம்— வன்னிப் பகுதியில் பம்பைமடுவைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவ நடவடிக்கை ஒன்றை அரசு ஆரம்பித்தது. 3ஆயிரம் படையினர் களத்தில் ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டது.

★ பெப்ரவரி 2— மாதகல் பகுதியில் முன்னேற முயன்ற படையினருடன் புலிகள் மோதினர். பத்துப் படையினர் கொல்லப்பட்டனர்.

★ பெப்ரவரி 4 — அமைச்சர் தொண்டமான் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது.

★ பெப்ரவரி 7 — இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் பி. பி. ஸி வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுக்கு வழங்கிய பேட்டியில் இலங்கை பிளவு படுவதை இந்தியா விரும்பவில்லை என்றார்.

உணவுத் தட்டுப்பாட்டை அடுத்து யாழ் அரச அதிபரைப் பதவி விலகுமாறு கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அரச செயலகங்களின் முன் மக்கள் மறியற் போராட்டங்களை நடத்தினர்.

★ பெப்ரவரி 8 — இன்றைய நிலையில் போதிய உணவுப் பொருள்களை எடுத்தவர் எவராவது முன்வந்தால் தாம் பதவி விலகத் தயார் என அரச அதிபர் தெரிவித்திருந்தார்.

வங்கக் கடலில் கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் உயிரிழக்கக் காரணமான இந்திய அரசின் நடவடிக்கை குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் ஐ. நா. சபையிடம் முறையிடு செய்துள்ளதாக தகவல் வெளியானது.

தளபதி கிட்டு பயணம் செய்த கப்பல் இடைமறிக்கப்பட்ட சம்பவத்தில் தமிழகஅரசோ, தமிழகப் பொலீஸாரோ சம்பந்தப்படவில்லை என தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

★ பெப்ரவரி 13— தமிழரின் தேசிய நலன் பேணும் கல்விச் சீர்திருத்தம் அவசியம் என்று தமிழீழ தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்தார். தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய பரீட்சையில் சிறப்புத் தகைமை பெற்ற மாணவருக்கு அவர் பரிசு வழங்கி கௌரவித்தார்.

கிளாலி நீரேரி ஊடாக மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு அரசு விதித்திருக்கும் தடையை நீக்கவேண்டும் என விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்தனர். யாழ். வந்திருந்த ஐ.நா. தூதரக ஆலோசகர் திரு. ரியூட்டர் மூலமாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

★ பெப்ரவரி 17 — பாக்கு நீரிணையில் மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கைகள் உட்பட இருதரப்பு விவகாரங்கள் பற்றி இந்திய, இலங்கை வெளியுறவுச் செயலாளர்கள் புதுடில்லியில் பேச்சு நடத்தினர்.

★ பெப்ரவரி 22 — பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை ஆகியவற்றால் எழுந்த பட்டினி நிலையை நீக்கக் கோரியும்— அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் யாழ். செயலகம் முன் மக்கள் மறியற் போராட்டம் நடத்தினர்.

★ பெப்ரவரி 23 —மும்முனைத் தாக்குதலை நடத்தியவாறு மாதகல் கடற்கரை வீதியூடாக முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர். ஏழு மணிநேரம் சண்டை நடந்தது.

பொலனறுவை மாதுறுஓயா பகுதியில் மினி முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கித் தகர்த்தனர். ஒன்பது படையினர் கொல்லப்பட்டனர்.

★ பெப்ரவரி 25—மன்னார் நானாட்டானில் இராணுவக் காவலரண்களைத் தாக்கி பல படையினரை புலிகள் கொன்றனர்.

கிளாலி கடலில் கடற்படையினரின் அதிவேக பீரங்கிப் படகு ஒன்று விடுதலைப் புலிகளின் கடல் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியது.

## மார்ச்

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பி. பி. ஸிக்கு வழங்கிய முக்கியத்துவம் வாய்ந்த நீண்ட பேட்டி மார்ச் 2ஆம் திகதி வெளியானது. சர்வதேச செய்தி நிறுவனங்கள் அதனை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன?

தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட வகையில் சமஷ்டி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால் —

தன்னாட்சி அதிகாரங்கள் அமையப்பெற்ற ஒரு சமஷ்டி ஆட்சித் திட்டம் முன்வைக்கப்பட்டால் அதனை நாம் பரிசீலனை செய்வோம் என்று பி. பி. ஸியின் சிறப்புப் பிரதிநிதி ஆனந்தி சூரியப்பிரகாசத்துக்கு வழங்கிய அந்தப் பேட்டியில் தலைவர் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறினார்.

சமாதானத்தை நான் ஆக்கபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக சமாதானமாக, சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக லட்சியம் — என்றும் அந்தப் பேட்டியில் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கூறினார்.

★ மார்ச் 02 — நள்ளிரவு கிளாலி கடற்பரப்பில் கடற்படைப் படகு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

★ மார்ச் 03 — நாவாந்துறை, அரியாலை பகுதிகள் மீது பொம்மர்கள் குண்டு வீசின. சிறுமி ஒருத்தி உயிரிழந்தாள்.

மார்ச் 05 — இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கத் தாம் தயாரில்லை என்றும் —

சமாதானப் பேச்சுக்களை தமது நாட்டில் நடத்துவதற்கு இடமளிக்கத் தயார் எனவும் நோர்வே அரசு தெரிவித்துள்ளதாக செய்தி வெளியானது

**கடந்த வருடத்தை திரும்பிப்பாருங்கள்**

★ மார்ச் 06 — போர் நடவடிக்கைகளில் திறமையான செயல் புரிந்த 66 வேங்கைகளுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பரிசில் வழங்கினார்.

★ மார்ச் 07 — பூநகரிப் பாதை விவகாரம்பற்றி ஐ. நா. தூதரகப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் யாழ். வந்து புலிகளுடன் பேசினார்.

பி. பி. ஸி. வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுக்கு ஜனாதிபதி பிரேமதாசா பேட்டியளித்தார். இனப்பிரச்சினைக்கு ஐ. நா. தலையீடு தேவையில்லை என அவர் கூறினார்.

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். பெண்ணால் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணம் என அதில் அவர் தெரிவித்திருந்தார்.

★ மார்ச் 08—அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் சங்குப்பிட்டி—கேரதீவு ஊடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களைப் போக்குவரத்துக்கு அனுமதிக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தனர்.

ஐ நா. அதிகாரி பீற்றர் நிக்கலசுக்கும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே இரண்டாவது நாளாக நடந்த பேச்சில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

★ மார்ச் 11 — இணைந்துள்ள வடக்கு— கிழக்கு மாகாணங்களை வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் எனப் பிரித்து அவற்றுக்குத் தனித்தனியே சமஷ்டி அலகுகள் அமைக்கப்படவேண்டும் என்று கூறும் இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத் தெரிவுக் குழு வெளியிட்டது.

அந்த இடைக்கால அறிக்கையை தமிழ்க் கட்சிகள் நிராகரிப்பது என்று தீர்மானித்தன.

★ மார்ச் 16 — ஏப்பிரல் —ஜூன் மாதங்களுக்கு இடையே ஆயுள் காலம் முடிவடைய இருந்த தென் பகுதி மாகாணசபைகள் ஒரே நேரத்தில் கலைக்கப்பட்டன.

★ மார்ச் 18—யாழ். குடாநாட்டுக்கு போக்குவரத்து வழியைத் திறப்பதற்கான அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் நடவடிக்கைகளை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஐ.நா. தூதரக அதிகாரிகள் பூநகரிக்கு விஜயம் செய்தனர்.

★ மார்ச் 19 — பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தக் கூடிய அதி சக்தி வாய்ந்த வெடி குண்டு ஒன்றை வட்டக்கச்சியில் கைப்பற்றியுள்ளதாகவும் —இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்திருப்பதாகவும் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையினர் அறிவித்தனர்.

★ மார்ச் 24 — கிளாலியில் கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் யாழ். மருத்துவபீட மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

★ மார்ச் 27 — மணலாறு சிலோன்தியேட்டர் இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர்.

★ மார்ச் இறுதி வாரம்— பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக யாழ். மாணவர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

★ மார்ச் 31 — கிளாலியில் படையினரின் பீரங்கித் தாக்குதலில் மருத்துவபீட மாணவர் கொல்லப்பட்டதைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

## ஏப்பிரல்

★ ஏப்பிரல் 09— மணலாறில் விடுதலைப்புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றில் அதிகாரி உட்பட 19 படையினர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

★ ஏப்பிரல் 10 — இடைக்காட்டில் இருந்து முன்னேற பெரும் எடுப்பில் படையினர் மேற்கொண்ட முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். அன்று இடம்பெற்ற ''புக்காரா'' மற்றும் ஷெல் தாக்குதல்களில் 3 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

அச்சுவேலிப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் விமானத் தாக்குதலில் உயிரிழந்தார். படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் வல்லைப் பாலம் சேதமடைந்தது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு சூறாவளி I என இராணுவம் பெயரிட்டது.

★ ஏப்பிரல் 15— தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்துக்கு மறுநாள் பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதியில் ஐந்து மணிநேரம் உக்கிரச் சண்டை நடந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். இந்த இராணுவ நடவடிக்கைக்கு ''சூறாவளி II'' எனப் படையினர் பெயரிட்டனர்.

★ ஏப்பிரல் 16—இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவர் விமானப் படையினரால் படுகொலையுண்டதைக் கண்டித்து யாழ். நகரில் ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெற்றது.

★ ஏப்பிரல் 18—அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் தமிழீழப் பகுதி எங்கும் நடைபெற்றன.

★ ஏப்பிரல் 19— மாணவர் அமைப்பினர் அன்னை பூபதி நினைவாக நடத்திய பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பை ஒட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

★ ஏப்பிரல் 20— இயக்கச்சிப் பகுதியில் காலைவேளை படையினர் முன்னேற எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். சாவகச்சேரி சந்தைக்கு அருகே குழி ஒன்றில் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

★ ஏப்பிரல் 21— வான், தரை, கடல் வழித்தாக்குதல்களுடன் ஆனையிறவுப் பகுதியில் இருந்து படையினர் முன்னேற பெருமுயற்சி எடுத்தனர். ஐந்து மணிநேர சண்டையின் பின் அவர்கள் பின் வாங்கிச் சென்றனர். யாழ். கிளிநொச்சியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

★ ஏப்பிரல் 23— ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் திரு. லலித் அத்துலத்முதலி கொழும்பு கிருலப்பனையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ ஏப்பிரல் 28— லலித் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்குகள் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இறுதி ஊர்வலம் நடைபெற்ற சமயம் பெரும் கலவரம் வெடித்ததைத் அடுத்து கொழும்பு நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

பூநகரி ஊடான வாகனப்

> கடந்துபோன 1993ஆம் ஆண்டில் உள்நாட்டில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் தொகுப்பின் முதலாவது பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது.
>
> பெப்ரவரி முதல் ஜூன் வரையான நிகழ்வுகளின் தொகுப்பு இரண்டாவது பகுதியாக இன்று பிரசுரமாகிறது.
>
> மூன்றாவது பகுதி தொடர்ந்து வெளிவரும்.

போக்குவரத்தைக் கண்காணிக்க தாம் தயார் என ஐ. நா. அகதிகள் தூதரகம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

## மே

★ மே 1 — கொழும்பில் நடந்த மேதினப் பேரணியில் தற்கொலையாளியின் குண்டுத்தாக்குதலில் ஜனாதிபதிபிரேமதாச பலியானார்.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். இலங்கை முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. மேதினக் கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

★ மே 2 — டி. பி. விஜேதுங்காவை ஜனாதிபதிப் பதவிக்கு வேட்பாளராக நிறுத்த ஐ. தே. கவின் நாடாளுமன்றக்குழுவும், செயற்குழுவும் முடிவு செய்தன.

★ மே 6— கடும்பாதுகாப்புக்கு மத்தியில் பிரேமதாசாவின் இறுதிக் கிரியைகள் சுதந்திரச் சதுக்கத்தில் நடைபெற்றன. கொழும்பில் இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

அல்லிப்பளை அளுத்தி அம்மன் கோவில் மீது புக்காரா விமானங்கள் தாக்குதல் நடத்தின.

★ மே 7 — ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாக டிங்கிரி பண்டா விஜேதுங்காவை நாடாளுமன்றம் ஏகமனதாகத் தெரிவு செய்தது. புதிய பிரதம மந்திரியாக ரணில் விக்கிரம சிங்கா நியமிக்கப்பட்டார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் நேரில் பேசுவதற்கு தாம் விரும்புவதாக புதிய ஜனாதிபதி தெரிவித்தார்.

★ மே 10 — பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக எயர் வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ பதவியேற்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருடன் பேசுவதற்கு ஏவரேனும் உதவி புரியலாம். அதற்குத் தாம் தயார் என புதிய ஜனாதிபதி விஜேதுங்கா கண்டியில் தெரிவித்தார்.

★ மே 16 — ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் நிபந்தனை எதுவுமின்றி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

★ மே 17 — வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் மாகாண சபைத் தேர்தல்கள் மிக அமைதியாக நடைபெற்றன.

★ மே 18 — 4 மாகாணங்களில் மட்டும் ஐ. தே. கட்சி வெற்றி பெற்றது. மேல் மாகாண சபையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது.

★ மே 22 — கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு [illegible] மகத்தானது என 'இது எங்கள் தேசம்' ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்தார்.

★ மே 26 — தென்மாகாண சபை, வடமேல் மாகாண சபை ஆகியவற்றில் நியமிக்கப்பட்ட ஐ. தே. க. முதலமைச்சர்களுக்கு பணிபுரிவதை இடைநிறுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

மே 29 — பொலனறுவை மாவட்டத்தில் ஜெயந்திபுர மினி முகாமின் 15 காவலரண்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர். 6 படையினர் கொல்லப்பட்டனர்.

## ஜூன்

★ ஜூன் 8 — அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி யாழ். வந்தார். பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேசினார்.

வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழு யாழ். வந்தது. சமாதானத் திட்டம் தயாரிக்க உதவுவதே எமது பணி என தூதுக்குழுவைச் சேர்ந்த பிலிப்பீன்ஸ் ஆயர் மேதகு குவாண்டி பியுபினோஸ் தெரிவித்தார்.

★ ஜூன் 9 — வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். அரசு யுத்த நிறுத்தம் செய்தாலே பேச்சுக்கு வழி பிறக்கும் என தூதுக்குழுவினரிடம் விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறினர்.

வடக்கில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 38 பொலீஸாரையும், இராணுவச் சிப்பாயையும் விடுவிக்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருவதாக அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

★ ஜூன் 10 — சர்வதேச சமாதானத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளைச் சந்தித்தனர்.

தம்மை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கத் தவறினால் தாம் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தெரிவித்து மகஜர் ஒன்றை அவர்கள் தூதுக்குழுவிடம் சமர்ப்பித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ''கடற்காற்று'' என்ற புதிய இராணுவ நடவடிக்கையை படையினர் ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பதை கிழக்கு மக்கள் விரும்புகிறார்களா என்பதை கண்டறியும் பொருட்டு கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்தது.

★ ஜூன் 13 — விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 சிங்கள யுத்தக் கைதிகள் தமது சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்

**இலநேசன்**

தனர்.

★ ஜூன் 15 — யுத்தக் கைதிகளின் சாகும்வரையான உண்ணாவிரதம் 3ஆம் நாளாகத் தொடர்ந்தது. உண்ணாவிரதப் போரைக் கைவிடுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ யுத்தக் கைதி ஒருவரின் உறவினருக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுக் கொண்டார்.

★ ஜூன் 16 — உண்ணாவிரதத்தை நிறுத்தக் கோரும் அரசின் உறுதிமொழி தமக்கு உரிய முறைப்படி கிடைக்க வேண்டும் என யுத்தக் கைதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு அகதி முகாமில் உள்ள ஐந்நூறு குடும்பங்கள் தம்மை மட்டக்களப்புக்கு திருப்பி அனுப்பும் திட்டத்தை எதிர்த்து உண்ணாவிரதம் ஆரம்பித்தன.

★ ஜூன் 17 — சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 78 பேர் கொழும்பில் இருந்து புறப்பட்டனர்.

★ ஜூன் 18 — யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 78 பேர் கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு வந்தனர்.

தலைமறைவாக இருந்த முன்னாள் பிரதிப்பொலீஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நாடு திரும்பினார்.

★ ஜூன் 19 — ஜனாதிபதியின் தூதுவராக பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவும், யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் அவசரமாக கொழும்பில் இருந்து யாழ். வந்தனர்.

பொருளாதாரத் தடையை நீக்கினால் யுத்தக் கைதிகளை விடுவிக்கத் தயார் என விடுதலைப் புலிகள் ஜனாதிபதியின் தூதுவரிடம் தெரிவித்தனர்.

சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்து ஏழாம் நாளில் யுத்தக் கைதிகளை பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா சந்தித்தார்.

★ ஜூன் 20 — ஜனாதிபதியின் தூதராக யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கொழும்பு திரும்பினார்.

★ ஜூன் 21 —பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா மீண்டும் யாழ். வந்தார். யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்குப் புலிகள் விதித்த நிபந்தனையை அரசு ஏற்றுக் கொண்டது, அது பற்றிய ஹமில்டன் வனசிங்காவின் கடிதத்தை வீரசேகரா விடுதலைப் புலிகளிடம் கையளித்தார்.

யுத்தக் கைதிகள் 38 பேரும் தமது சாகும் வரையான உண்ணா விரதத்தைக் கைவிட்டனர்.

மருந்து, பெற்றோல், டீஸல் மீதான தடைகள் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அரசின் நல்லெண்ணத்தை அங்கீகரிக்கும் வகையில் யுத்தக் கைதிகளைக் கட்டம் கட்டமாக விடுவிக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் முடிவு செய்தார்.

★ ஜூன் 22—யுத்தக் கைதிகள் ஐவர் விடுவிக்கப்பட்டனர். அவர்களுடன் கைதிகளின் உறவினர்களில் 28 பேர் கொழும்பு திரும்பினர்.

தடை நீக்கப்பட்ட பொருள்கள் விரைவில் யாழ். வந்து சேரும் என ஜனாதிபதியின் தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவும், யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகரும் தெரிவித்தனர்.

★ ஜூன் 23 பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கொழும்பு திரும்பினார். அரச அதிபரும் அவருடன் சென்றார். தடை நீக்கப்பட்ட பொருள்களின் தேவை விவரங்களை அரசுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

அராலித் துறை கண்ணி வெடிச் சம்பவத்தில் புலிகள் வைத்த தரைக் கண்ணியே 10 படையினரையும் பலி கொண்டது என கொமன்வெல்த் விசாரணைக் குழு அறிக்கை வெளியிட்டது.

மண்ணெண்ணெய் உட்படப் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குடாநாட்டில் பெருவீழ்ச்சி கண்டன.

★ ஜூன் 25 — பொருள்கள் மீதான தடை நீக்கம் குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியானது.

★ ஜூன் 26 — ஜனாதிபதியின் தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா மீண்டும் மூன்றாவது தடவையாக யாழ். வந்தார். யாழ். அரச அதிபரும் அவருடன் கூட வந்தார்.

★ ஜூன் 27 — யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாகத் திரட்டப்பட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் வீரசேகராவிடம் கையளித்தனர். அந்த அறிக்கையை எடுத்துக்கொண்டு அவர் கொழும்பு திரும்பினார்.

★ ஜூன் 28 — யுத்தக் கைதிகள் விவகாரத்தில் தடைநீக்கப்பட்ட பொருள்களை வடக்கே அனுப்ப இணக்கம் தெரிவித்திருந்த அரசு அந்த இணக்க நிலைப்பாட்டில் இருந்து கடைசி நேரத்தில் பின்வாங்கியது.

★ ஜூன் 29 — வடக்கிற்கான பொருளாதாரத் தடை மீண்டும் முழு அளவில் கொண்டு வரப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

தடைநீக்கப்பட்ட பொருள்களுடன் வடக்கே வந்து கொண்டிருந்த 'றுகுணு' கப்பல் திருமலையில் இடைமறிக்கப்பட்டு அங்கு தரித்தது.

★ ஜூன் 30 — புலிகளால் விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதி ஒருவரும், உறவினர்களில் 7 பேரும் இங்கிருந்து புறப்பட்டனர்.


**உதவித் தாதியர் பயிற்சி**

**DIPLOMA IN NURSING - AID**

**28 - 01 - 1994இல் ஆரம்பம்**

★ 18 மாதகால பயிற்சி நெறி
★ தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
★ உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்புடையதான சான்றிதழ்.
★ ''அக்குபங்சர்'' மருத்துவத்துறை இலவசமாக கற்பித்து சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு;- மாவீரர், போராளிகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச பயிற்சியும், இலவச தங்குமிட வசதியும் அளிக்கப்படும்.

விவரங்கள்:-

**சாயி மருத்துவக் கல்லூரி,**

இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

(சி-6841)

**பிறமொழி ஆசிரியர் தேவை**

ஸ்பானிஸ், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷ்யன், ஜப்பான் போன்ற சர்வதேச மொழிகளைத் தமிழ்மூலம் கற்பிக்க அனுபவசாலிகள் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் 07 - 01 - 94 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்:
582, மே/பா உதயன்

(28705)

**புது வருட வாழ்த்துக்கள்**

புதுவருட வாழ்த்து மடல்கள்
புதுவருட சோடனைப் பொருள்கள்
புதுவருட கேக் சாமான்கள்
புதுவருட ஹப்பி நியூ இயர் எழுத்துக்கள்

**பலூன்கள்**

(சில்லறையாகவும், மொத்தமாகவும்)

விளையாட்டுச் சாமான்கள்
எவர்சில்வர் சாமான்கள்
பான்சி, பிறசென்டேசன்
குளிர்பானம் தயாரிக்கும் சாமான்கள்
வேறும் பல ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**றாஜா ஸ்ரோர்ஸ்**

'றாஜா பில்டிங்'

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழீழ, அரசாங்க, விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய நடுத்தர கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகில், ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (28628)

52 நாட்கள் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. க. நடராசா, புலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளையில் ஒழுங்கை) கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட், கோண்டாவில். (28692)

பாவித்த நல்ல நிலையில் உள்ள தேக்கு, முதிரை அலுமாரி, உருக்கு அலுமாரி தையல் மெஷின், வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28696)

நல்ல நிலையிலுள்ள Dining Table (சாப்பாட்டுமேசையும்) இதற்குரிய குசன் கதிரைகள் ஆறும உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3. விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (28677)

நல்லின ஜேர்மன் செப்பேட் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளுமிடம்: K.S. R. போட்டோஸ் இல. 12A, கந்தப்புராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (28674)

அங்கோரா இன (சடை முயல்கள்) முயல்கள், 1 மாத, 2 மாதக் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. மறோன், அரசடி, நவாலி தெற்கு. மானிப்பாய். (6881)

Broiler இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். (28657)

இரண்டு வெள்ளை பொமனேரியன் ஒரு மாதக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல: 9, மூன்றாம் குறுக்குத் தெரு (அடைக்கல மாதா கோவில் பக்கமாக), யாழ்ப்பாணம். (28645)

### வெளிவந்து விட்டது

''அலுவலக முகாமைக்கு ஓர் வழிகாட்டி'' ஆக்கியோன்: தேவராஜன் ஜெயராமன், B. Com. (Hons), M B.A. (Delhi) A.M.I P.M. (Sri Lanka) விரிவுரையாளர், வணிக முகாமைத்துவத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (6883)

### புதிய வகுப்புகள்

1994 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. முற்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். ஆண்டு 3 முதல் ஆண்டு 9 வரை வகுப்புகள் நடைபெறும். ஆண்டு 5 Weekend (சனி, ஞாயிறு) வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28694)

### மணமகள் தேவை

4இல் செவ்வாய், நட்சத்திரம் விசாகம், வயது 30 நில அளவையாளராகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. இ. பாஸ்கரன், 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28631)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உங்களுக்குத் தேவையான மணமக்கள் பலர் இருக்கிறார்கள். ஞாயிறு காலை சந்தித்து தேவைகளை பூர்த்தி செய்யுங்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (28700)

### மணப்பெண்கள் தேவை

பிரான்ஸில் வேலை செய்யும் 37 வயது கத்தோலிக்கருக்கும், இந்து, செவ்வாய்க் குற்றமற்ற 30 வயது ஆசிரியருக்கும், 37 வயது கத்தோலிக்க பட்டதாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (28699)

### தவறிவிட்டது

கணேசலிங்கம் பிரியதர்சினி என்பவரது கைச்சங்கிலி 06–12–93 அன்று திருஞான சம்பந்தர் வித்தியாசாலை பரீட்சை முடிந்து வரும் போது, வட்டுக்கோட்டையில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். செட்டிகுறிச்சி, சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு. (28703)

### பொக்கற் கலண்டர்

சாயி பாபா பொக்கற் கலண்டர் '94 பாபாவின் பல்வேறு படங்கள் பொக்கற் கலண்டராக வெளிவந்துள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும் இடம்: பகவான் மருந்தகம், 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி–6784)

### திருத்திய பொருள்கள்

31 – 12 – 93க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்தவைகளை 31–01–94க்கு முன் ரசீதைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவும். 31-01-94க்குப் பின் அவற்றை மீளப் பெறமுடியாதென்பதை அன்புடனும், வேதனையுடனும் தெரியப்படுத்துகின்றோம். றட்ணம்குலம்ஸ், இல, 10 கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28697)

**அறிவுக் களஞ்சியம்-19**
**05-01-1994** இல் வருகிறது! (சி/6859)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

பின்வரும் பீடங்களில் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் 1992 / 93 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளன.

மருத்துவபீடம் (புதிய மாணவர் உட்பட) — 1994-01-03.

கலைப்பீடம்;- 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருடம்— 1994 - 01 - 17. புதிய மாணவர் — 1994-02-07

சித்த மருத்துவம் (புதிய மாணவர் உட்பட) — 1994-01-17.

விவசாயபீடம் (புதிய மாணவர் உட்பட) — 1994-01-17.

விஞ்ஞான பீடம் (கணனி விஞ்ஞான ஆரம்ப பயிற்சி நெறி- புதிய மாணவர்களுக்கு மட்டும்) — 1994-01-03.

மாணவர்கள், மேற் குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாக உள்ள விரிவுரைகளுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

— பதிவாளர்.
(சி-6795)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
by
**MR. M. A. HARI**
B. A Dip In Eng.
ஆரம்பம்
3–1–94
திங்கள் காலை 9 மணி
Time Table
பிரிவு I :- செவ், வியா 9 மணி
பிரிவு II :- சனி, ஞாயிறு 11 மணி
அனுமதியை முன்கூட்டியே பெறவும்
**நியூ சயன்ஸ் சென்ரர்**
எழிலகம் முன் லேன், யாழ்ப்பாணம் (சி/6796)

**விலங்கியல்**
R ஈஸ்வரதாசன்
B Sc. (Cey). Dip. In Ed.
க. பொ. த உயர்தரப் பரீட்சையில் தோன்றிய மாணவர்களுக்கான
**PAPER CLASS**
ஆரம்பம்
03 - 01 – 1994 திங்கள் 4 30 மணி
**SCIENCE COLLEGE**
பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம் (சி/6797)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தேர், ஆலய வாயிற் கோபுரங்கள்
புனருத்தாரண வேலைகளுக்கான

## கேள்விப் பத்திரங்கள் கோருதல்

மேற்படி ஆலயத்தின் மேற்காணும் வேலைகளுக்கு தகுந்த சிற்பாஸ்திரிகள், வர்ணம் பூசுவோர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. தேர் - தேரின் மேற்பகுதியான எழுதகம் முழுவதற்கும் நாம் கூறும் தடிப்புள்ள பித்தளைத் தகட்டினால் மூடுவதற்கும், மற்றும் விவரங்களை ஆலய முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.
2. ஆலய கோபுரங்கள், மண்டபம் மைபூசுதல். மேற்படி வேலைக்குரிய பொருள்கள் ஆலயத்தினால் வழங்கப்படும். (கூலி மட்டும்)

மேற்படி வேலைகளுக்கான கூறுவிலைகள் யாவும் 8 - 1 – 1994 நண்பகல் 12 மணிக்கு முன்பு பதிவுத் தபாலில் தலைவர், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பவும். கூறுவிலைகள் தனித்தனி தபாலில் அனுப்பப்பட்டு தபாலின் வெளிப்புறத்தில் வேலையின் பெயர் குறிக்கப்பட வேண்டும்.

செயலாளர்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தருமகர்த்தாக்கள் சபை.
(28651)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 27 — 03 — 1924



ஆண்டவன் அடியில்: 12 — 01 — 1993

**அமரர் வல்லிபுரம் இராசமணி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

ஆண்டு ஒன்று ஓடி மறையுது - உம் அன்பு மீண்டும் மீண்டும் நெஞ்சில் நிறையுது.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்.

இல. 100, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(28701)

## புது வருட வாழ்த்து

''கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார் துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார்.''
சங். 147 : 2

1994 ஆம் வருடம் எமது தேசத்தில் வாழும் சகல மக்களுக்கும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரும் வருடமாக மலர வேண்டும் என்று சகல மக்களையும் வாழ்த்துகிறோம்.

## புதிய எருசலேம் சபை
யாழ்ப்பாணம்

இந்தக் கல்லின் மேல் விழுகிறவன் நொருங்கிப் — போவான்,
இது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்
மத்தேயு 21 : 44
(6885)

## வீக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L** EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN. CLASSES (8-00 — 1-00)

ஆண்டு 10ஆம், 9ஆம், 8ஆம், 7ஆம், 6ஆம் (3-15 — 6-00) க்கான அனுமதிகளை 27-12-93 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஆரம்பம்: 06 - 01 - 1994**

(சி-6777) — அதிபர்.

## புத்தாண்டில் ஓர் நற்செய்தி

நீங்கள் எதிர்பார்த்த
* பூநகரி சமர் ஒளி வீச்சு
* மற்றும் புதிய சினிமாப் படங்கள்

எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்

எங்கள் ஸ்தாபனம் சனி, ஞாயிறு கிழமைகளிலும் திறந்திருக்கும்.

**விக்ரேஸ்**
இல; 100, ஸ்ரான்லி வீதி,
(அர்ச்சுனா வீதி)
யாழ்ப்பாணம்.
(28676)

ESTD:- 1973 REGD:- No J/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY

**கல்வி ஆண்டு 1994 க்கான புதிய வகுப்புகள்**

அனுமதி பெறுவதற்கான முடிவு திகதி இம்மாதம் 10 ஆம் திகதி வரை மட்டுமே நீடிக்கப்பட்டுள்ளது.

- அதிபர்
(28695)

## யாழ்ப்பாணக் கல்லூரி
(பட்டதாரிப் பிரிவு)

JAFFNA COLLEGE CEYLON

### புதிய வருடத்தில் புதிய ஆரம்பம்

1. **G S Q. BIO CLASSES**
(Botany, Zoology and Chemistry)
2. **G.A.Q. (PERADENIYA)**
Tamil, Economics, Hindu Culture, Philosophy, Christianity, English Literature.

வார இறுதி வகுப்புகள்

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டையிலும் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை இரு இடங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 15, 1994

- அதிபர்.
(சி-6799)

## பதவி வெற்றிடம்

பதவி: கொத்தணி பொதுமுகாமையாளர்

கல்வித் தகைமை:

இரசாயனத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானப் பட்டதாரி அல்லது வடிசாலை அல்லது அதற்கு ஒப்பான ஸ்தாபனத்தில் உற்பத்திப் பணிகளில் 15 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது உற்பத்தி நிலையம் ஒன்றில் முகாமையாளராகக் கடமையாற்றிய அனுபவம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போட்டி அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

சம்பளம்: 4000 - 150x4 - 200x7 - 6000/-

இத்துடன் கூட்டுறவுச் சேவையாளருக்குரிய மேலதிகப் படிகளும் வழங்கப்படும்.

வயது: 25 — 50 வருடங்கள்

குறிப்பு:

கேட்கப்பட்ட கல்வித் தகைமைகள் இருந்தும் அனுபவம் இல்லாது இருப்பின் அல்லது கேட்கப்பட்ட அனுபவம் இருந்தும் கல்வித் தகைமை இல்லாது இருப்பினும் பொருத்தமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படுவர். பொறுப்புகளுக்கேற்ற வகையில் பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ''பொது முகாமையாளர், தென்மராட்சி, பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி'' என்ற விலாசத்திற்கு 10 — 01— 1994 க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித இடது பக்க மேலுறையில் பதவிக்குரிய பெயர் எழுதப்படல் வேண்டும்.

தலைவர்,
தென்மராட்சி,
ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி,
பருத்தித்துறை வீதி, வரணி.

30-12-1993. (28680)

எமது வாடிக்கையாளருக்கும் பாவனையாளர்களுக்கும்
அனைவருக்கும் எங்களின்

## ★ புதுவருட நல் வாழ்த்துக்கள் ★

**பாவியுங்கள்!**

பல்லாயிரக்கணக்கான மக்களின் அபிமானத்தைப் பெற்ற

# றோயல் தயாரிப்புகள்

**இதோ**

★ றோயல் பேக்கிங் பவுடர்
★ றோயல் அறோறூட் பவுடர்
★ றோயல் கஸ்ரட் பவுடர்
★ றோயல் ஜெலடின்
★ றோயல் கொக்கோப் பவுடர்
★ றோயல் ஜெலி கிறிஸ்டல்ஸ்
★ றோயல் குளுக்கோஸ் "டீ"
★ றோயல் கோண்பிளவர்
★ றோயல் றோஸ் டெல்க்கம் பவுடர்
★ தீபா றோஸ் டெல்க்கம் பவுடர்
★ ரெமிக்குறா டெல்க்கம் பவுடர்
★ றோயல் நீலம்

மற்றும் பல

தயாரித்து விற்பனை செய்வோர்:

**றோயல் இன்டஸ்ரீஸ்**
22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13,
தொலைபேசி இல. 326679

கிளை: **றோயல் இன்டஸ்ரீஸ்**
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வட மேற்கு,
ஆனைக்கோட்டை,

கடந்த வருடம் எமது வியாபாரத்திற்கு உதவிகள் பல நல்கிய விற்பனையாளர்களுக்கும், வாடிக்கையாளருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!
[28606]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## புத்தாண்டே வருக!

**1994** - புதியஆண்டு-புத்தாண்டு இன்று மலர்கிறது.

புத்தாண்டை புதிய நம்பிக்கையோடும், நன்மை நல்கும் ஆண்டாக அமைய வேண்டும் என்ற வேண்டுதலோடும் சகல மக்களும் வரவேற்பர்.

அல்லல், அவலம், அச்சம், இல்லாமை, இடர், துன்பம், பட்டினி, பிணி என்பன நீங்கி தமது வாழ்வில் நலமும், வளமும் பிறக்க வேண்டும், பெருக வேண்டும் என்று எல்லோரும் விழைவதுண்டு.

உலகின் ஏனைய மக்களைப் போலவே ஈழத்தமிழ் மக்களும் தங்கள் கஷ்டங்கள், துன்பங்கள் நீங்கிப் புதுவாழ்வு பிறக்க வேண்டும் என்று மனதார விரும்புகிறார்கள்.

ஆனால் இவை எல்லாவற்றையும் விட, அவர்கள் தமது அடிமை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைத்து, புதுவருடம் சுதந்திர வாழ்வைத் தர வேண்டும் என்றே பெரிதும் வேண்டுதல் செய்கிறார்கள்.

இலங்கை நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக அன்றி, தமது தமிழ் மண்ணின் முதலாம் தர மக்களாக தங்களுக்குள்ள பிறப்புரிமைகளுடன் வாழ முடிந்தால் மட்டுமே தாங்கள் கடந்த பல வருடங்களாக அனுபவித்து வரும் இன்னல்களையும், இல்லாமைகளையும் போக்கி வளமும், நலமும் பெற முடியும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

போர் நீங்கி அமைதி பிறக்க வேண்டும். பிரச்சினை தீர்ந்து சமாதானம் தோன்ற வேண்டும். இவற்றை அடைவதற்குத் தமிழர்கள் தமக்கு இடப்பட்டுள்ள அடிமை விலங்கை உடைத்து சுதந்திர மனிதர்களாக வேண்டும்.

கடந்த மூன்று வருடங்களாகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மிகக் கூர்மை அடைந்துள்ளது. அந்தக் கூர்மையின் வல்லமை வலிமை ஸ்ரீலங்காவில் மட்டுமன்றி, உலகத்திலும் உணரப்படுகிறது.

ஆனாலும் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உளமார்ந்த எண்ணம் ஸ்ரீலங்காவுக்குத் தோன்றவில்லை. அதேபோல தமது பிறப்புரிமைகளுக்காக, வாழ்வுரிமைகளுக்காகச் சமரிடும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற எண்ணம் சர்வதேச சமூகத்துக்கு உதிக்கவில்லை.

புதிய வருடம் அந்த இரண்டையும் உண்டாக்கும் செயல் ஆண்டாக அமைய வேண்டும். அது மட்டுமன்றிக் களத்தில் தமிழர் தரப்பு மேலோங்கி நிற்கின்ற வெற்றி நிலை நீடிக்க வேண்டும்; நிலை பெற வேண்டும். இவற்றுக்காக உழைப்பதற்குத் தமிழ் மக்கள் தம்மை தக்கவாறு தயார்ப்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.

இராணுவ ரீதியாகத் தமிழர் தரப்பு ஈட்டியுள்ள வெற்றிகளைப் பெறுமதி இல்லாமற் செய்து, தானே மேலோங்க வேண்டும் என்பதற்காக இந்த வருடத்தில் இதுவரை இருந்ததை விட அதிக மூர்க்கத்தனமும், அசுரத்தனமும் உள்ளதாக ஸ்ரீலங்கா அரசு மாறலாம். தமிழ் மக்களை எல்லா வழிகளாலும் மிகப்பெரிய அளவில் பலவீனப்படுத்தவும் சித்தம் கொள்ளலாம். அவை எல்லாவற்றையும் எதிர்கொள்ளும் மனோபலம் தமிழருக்குத் தேவை.

1994 இல் பிரச்சினை தீருமா; சமாதானம் வருமா; தீர்வு கிடைக்குமா; அரசின் பொருளாதார, போக்குவரத்துத் தடைகள் நீங்குமா; எங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்று வாழ வழி பிறக்குமா; நாளாந்த வாழ்க்கைப் படகைச் செலுத்துவதற்கு வருவாய், தொழில் வசதி கிடைக்குமா? — என்று ஏங்குவதோடு மட்டும் தமிழர் நெஞ்சங்கள் நிற்காமல் —

அரசின் அடக்குமுறையில் இருந்து விடுபடுவது எப்படி; எங்கள் தலைவிதியை நாமே நிர்ணயிக்க வழி சமைப்பது எவ்வாறு; ஸ்ரீலங்கா அரசை வழிக்குக் கொண்டு வருவது எங்ஙனம்; எமது போராட்டத்தின்பால் உலகின் கவனத்தை உரியவாறு ஈர்ப்பது எப்படி? — என்று சிந்திக்க வேண்டும். அந்தச் சிந்தனை செயல்வடிவம் பெற உழைக்கவும் வேண்டும்.

அப்போதுதான் ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்காம் ஆண்டு வெற்றி வருடமாக மின்னும். புதுவருடம் அவ்வாறேஅமைய வேண்டும் என விரும்பி அதனை வரவேற்போமாக!

# சர்வதேச நெருக்கடிகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், தீர்வுகள் இழுபறி நிலையில்

# பொஸ்னியா, சோமாலியா, ஹெய்ட்டியில் அமெரிக்க தலையீடு பெரும் தோல்வி

கடந்த 45 வருட காலமாக உலகை யுத்த நிலையில் வைத்திருந்த மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக கடந்த செப்டெம்பர்மாதம்வாஷிங்டனில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மூலம் 1993 ஆம் ஆண்டு உலக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறப் போகிறது.

அதே போன்றதே தென் ஆபிரிக்கா வட அயர்லாந்து பிரச்சினைகள் தொடர்பான இணக்க நிலையும் ஒப்பந்தமும் ஆகும்.

இந்த மூன்று பிரச்சினைகளிலும் இறுதித் தீர்வை எட்டுவதற்கு இன்னும் எத்தனையோ தடைகளைத் தாண்ட வேண்டி இருக்கிறது.

அதேசமயம் பொஸ்னியா, சோமாலியா, ஹெய்ட்டி பிரச்சினைகள் உருப்படியான தீர்வு இன்றி இழுபட்டுச் செல்கின்றன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் தன்னை "உலக பொலீஸ்காரன்" நிலைக்கு உயர்த்திக் கொண்டு ஐ. நாவின் பின்னால் நின்று இயங்கும் அமெரிக்கா, இந்தப் பிரச்சினைகளைக் கையாளும் விதம் குறித்து பலவிதமான விமர்சனங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

### மத்திய கிழக்கு

மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக கடந்த செப்டெம்பர் மாதம் இஸ்ரேஸ் பிரதமர் ரபீனுக்கும் பலஸ்தீன விடுலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் இடையில் வாஷிங்டனில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 1967 முதல் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருந்துவரும் காஸாவிலும் ஜோர்தானின் மேற்குக்கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பான இந்த ஒப்பந்த அமுல் தற்பொழுது பெரும் இழுபறி நிலையில் இருந்து வருகிறது. ஒப்பந்தத்தின்படி டிசம்பர் 13ஆம் திகதி காஸாவிலும் ஜெரிக்கோவிலும் இருந்து இஸ்ரேல் தனது படை வாபஸை ஆரம்பிக்க வேண்டும். 1994 ஏப்பிரல் 13 ஆம் திகதி படை வாபஸ் பூர்த்தியாக வேண்டும். ஆனால் ஒப்பந்தத்தின் பிரகாரம் டிசம்பர் 13ஆம் திகதி தனது படைவாபஸை ஆரம்பிக்க இஸ்ரேல் தவறிவிட்டது.

★ ஜோர்தானுக்கும் ஜெரிக்கோவுக்கும் இடையிலான எல்லைகளிலும் எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையிலான எல்லைகளிலும் அமைக்கப்படும் காவல் நிலையங்கள் எவரின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும்? அதாவது இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலா? அல்லது பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டிலா?

★ பலஸ்தீனர்களின் சுயாட்சிக்கு உட்படுத்தப்பட உள்ள ஜெரிக்கோ நகரின் பரப்பளவு.

★ காஸாவிலும், ஜெரிக்கோவிலும் உள்ள யூத குடியிருப்புகளைப் பாதுகாக்க நிறுத்தப்பட உள்ள இஸ்ரேல் படையினரின் எண்ணிக்கை.

இந்த மூன்று விடயங்களுமே தற்போதைய இழுபறி நிலைக்குக் காரணமாகும்.

இந்த மூன்று விடயங்களும் தொடர்பாக நோர்வேயிலும் கெய்ரோவிலும் எத்தனையோ சுற்றுப்பேச்சுக்கள் நடந்து முடிந்துவிட்டன, ஆனால் தீர்வு எதுவும் இல்லை. இந்த விடயங்களில் இஸ்ரேல் விட்டுக்கொடுக்க மறுத்து பிடிவாதமாக இருந்து வருவதால் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் தனது இயக்கத்துக்குள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளார்.

அதேசமயம், 1967 யுத்தத்தில் இஸ்ரேலிடம் சிரியா இழந்த கோலன்குன்றுகள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வாரண் கிறிஸ்தோபர் டமாஸ்கஸிலும், ஜெரூஸலத்திலும் பல சுற்றுப்பேச்சுக்களை நடத்தி முடித்துள்ளார். இஸ்ரேல் பிரதமர் ரபீனும் சிரியா ஜனாதிபதி அஸாத்தும் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### தெற்கு ஆபிரிக்கா

தென் ஆபிரிக்காவில் 350 வருடகால சிறுபான்மையினர் வெள்ளையர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முனைப்பாகி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கறுப்பு இனத்தவர்களும், வெள்ளையர்களும் அதிகாரப் பகிர்வு செய்யும் புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏப்பிரல் 27 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்த முயற்சிகளுக்காக நோபல் பரிசு பெற்றுள்ள தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி கிளேக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் தமது குறிக்கோளை அடைவதற்கு இன்னும் எத்தனையோ படிகளைத் தாண்ட வேண்டிய நிலையில் உள்ளனர்.

அதேசமயம் தீர்வுக்குத் தடையாக இருக்கும் தீவிர வலதுசாரி வெள்ளையர்கள், ஆபிரிக்கதேசியகாங்கிரஸுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் தீவிரவாத கறுப்பு இனக் குழுக்கள்— சுட்சிகள் ஆகியவற்றின் சவால்களையும் இவர்கள் எதிர்நோக்கி உள்ளனர். தென் ஆபிரிக்காவில் 9 பிராந்திய சபைகளை ஏற்படுத்தவும் 400 பேரைக் கொண்ட நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சகல முயற்சிகளும் சுமுகமாக முடிவடைந்தால் ஏப்பிரல் தேர்தலில் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதியாகும் வாய்ப்பு இருந்து வருகிறது.

### வட அயர்லாந்து

வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழி திறக்கும் கூட்டுப் பிரகடனம் ஒன்றில் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரும் ஐரிஷ் குடியரசுப் பிரதமர் அல்பேர்ட் றெனோல்ட்ஸும் கைச்சாத்திட்டிருப்பது மூலம் சர்வதேச அரங்கில் மற்றும் ஒரு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

ஆனால் மத்திய கிழக்கு ஒப்பந்தம் போன்று இந்த ஒப்பந்தமும் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதற்கு காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

ஜோன் மேஜர் — அல்பேர்ட் றெனோல்ட்ஸ் கூட்டுப் பிரகடனத்தின்படி ஐ.ஆர்.ஏ. என அழைக்கப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவம் வன்முறைகளைக் கைவிட்டு மூன்று மாதங்களுக்குள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஆனால் இந்த சமரச முயற்சிக்கு ஐரிஷ் குடியரசு இராணுவம் எவ்வளவுக்கு ஒத்துப் போகும் என்பது குறித்து இதுவரை தெளிவான அறிக்கை எதுவும் இல்லை.

இந்தக் கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டு இரு வாரங்களுக்குள் வட அயர்லாந்தில் பிரிட்டிஷ் படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதும்— தலைநகரான பெல்பாஸ்டில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதும் சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்பை மேலும் குன்றச் செய்துள்ளது.

ஐக்கிய ராஜ்யத்தில் அங்கம் வகிக்கும் வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினரே பெரும்பான்மையினர் ஆவர். இவர்கள் வட அயர்லாந்து தொடர்ந்து பிரிட்டனின் கீழ் இருந்து வரவேண்டும் என்று விரும்புகின்றனர்.

ஆனால் சிறுபான்மையினரான கத்தோலிக்கர்கள் ஐரிஷ் குடியரசுடன் இணைய விரும்புகிறார்கள்.

ஐரிஷ் குடியரசு இராணுவம் கத்தோலிக்கர்களுக்காகப் போராடி வருகிறது.

### இந்தியா

சமீபத்தில் நடைபெற்ற உத்தர பிரதேச,மத்திய பிரதேச, ராஜஸ்தான், இமாசல பிரதேச, டில்லி சட்டசபைத் தேர்தல் முடிவுகள் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு எதிர்பார்க்கப்பட்டதைவிட சாதகமாக அமைந்ததால் கடந்த இரண்டு வருட காலத்தில் முதற் தடவையாக மத்தியில் அரசியல் ஸ்திர நிலை ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

மூன்று நம்பிக்கையில்லாத் தீர்மானங்களில் தப்பிப் பிழைத்துள்ள நரசிம்மராவ் அரசு அடுத்த [illegible] களையும் சமாளிக்கும் நிலையில் இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

முன்னாள் மத்திய அமைச்சர் அஜித்சிங் தலைமையிலான ஜனதாதள் காங்கிரஸுடன் இணைந்து விட்டதால் காங்கிரஸ் மேலும் பலம் அடைந்துள்ளது.

பம்பாய் பங்குப்பேர ஊழல் சூத்திரதாரி ஹர்ஸத் மேத்தாவுக்கு ஒரு கோடி ரூபா லஞ்சம் கொடுத்தது.— அரசியல் துர்ப்பிரயோகம் —போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் நரசிம்மராவ் அரசு மீது சுமத்தப்பட்டிருந்தன.

அக் குற்றச்சாட்டுக்கள் பெரும் அளவில் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பது சமீபத்திய சட்டசபைத் தேர்தல் முடிவுகள் மூலம் புலனாகிறது.

காங்கிரஸ் கட்சி இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை மக்களைக் கவரக்கூடிய தலைமை ஒன்று இல்லாதது தான்.

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி முறிவு, தி. மு. க. பிளவு ஆகியவை கடந்த ஆண்டு நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் எனலாம். அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி முறிந்ததை அடுத்து தமிழ்நாடு மாநில அரசுக்கும் மத்தியில் நரசிம்மராவ் அரசுக்கும் இடையிலான நல்லுறவுகள் பாதிக்கப்பட்டன. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியையும் தமிழ்நாடு ஆளுநர் சென்னாரெட்டியையும் அகற்றும் கோரிக்கைக்கு நரசிம்மராவ் அரசு இணங்க மறுப்பதால் அ. தி. மு. கவும் காங்கிரஸும் மீண்டும் கூட்டுச் சேரும் வாய்ப்பு அரிதாகவே இருக்கிறது.

### பாகிஸ்தான்

பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலில் பெனாஸிர் பூட்டோ வெற்றி பெற்றதை அடுத்து பாகிஸ்தானில் மீண்டும் அரசியல் ஸ்திரநிலை ஏற்படும் சாத்தியம் உருவாகி வருகிறது. பெனாஸிர் பூட்டோவின் வேட்பாளரே ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்றிருப்பதால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் கடந்த காலங்களில் நிலவி வந்த இழுபறி நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு ஸியா-உல்-ஹக்கின் மரணத்தின் பின்னர் அவரின் அதிகாரங்களைப் பயன்படுத்திதான் விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து வந்த குலாம் இஷாக்கான் இராணுவத்தின் நிர்ப்பந்தம் காரணமாக ஓய்வுபெற்றதே பாகிஸ்தான் உள்நாட்டு நெருக்கடியில் தீர்வு ஏற்படக் காரணமாக அமைந்தது.

ஆனால் இந்த நெருக்கடி தற்போது மற்றும் ஒரு ரூபத்தில் கட்சிக்குள் தலைதூக்கி உள்ளது.

பெனாஸிர் பூட்டோவுக்கும் அவரின் தாயாரான பேகம் பூட்டோவுக்கும் இடையில் உள்கட்சிப் போராட்டம் ஒன்று நடைபெற்று வருகிறது. மக்கள் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும் பேகம் பூட்டோ நீக்கப்பட்டுள்ளார்.

தனது மகன் முர்தாஸா பூட்டோவை அரசியலுக்குக் கொண்டுவர பேகம்பூட்டோ முயற்சிக்கிறார். இதற்கு பெனாஸிர் பூட்டோவின் எதிர்ப்பு இருந்து வருகிறது.

பெனாஸிர் பூட்டோவின் தற்போதைய சீன, வட கொரிய விஜயம், அமெரிக்கா இந்தியா பக்கம் அதிகம் சாய்வதன் எதிரொலியே.

### பொஸ்னியா

முன்னாள் யூகோஸ்லாவியாவின் 6 சமஷ்டிப் பிரிவுகளில் ஒன்றான பொஸ்னியாவில் கடந்த 15 மாதங்களாக நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகள் எதுவும் இதுவரை உருப்படியான பலனை அளிக்கத் தவறிவிட்டன.

பொஸ்னிய சனத் தொகையில் 31 சதவீதமான சேர்பியர்கள் இந்த யுத்தத்தில் 70 சதவீதமான நிலப்பரப்பை [illegible] அகண்ட சேர்பியா ஒன்றை அமைப்பதே இவர்களின் நோக்கம் ஆகும். இந்த யுத்தத்தில் இதுவரை இரண்டு லட்சம் பேர் வரை — பெரும்பாலானோர் முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தமது சொந்த இடங்களில் இருந்து சேர்பியர்களினால் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் இன்று பொஸ்னியாவின் மூன்று பகுதிகளில் ஆறு அகதி முகாம்களில் தங்கி உள்ளனர். சேர்பியர்களின் தாக்குதல்களில் இருந்து இந்த அகதி முகாம்களைப் பாதுகாப்பதற்காக ஐ. நாவினால் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனைவிட எதனையுமே ஐ. நாவினால் சாதிக்க முடியவில்லை.

பொஸ்னிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கடந்த பல மாதங்களாக அமெரிக்க —ஐரோப்பிய ராஜதந்திரிகள் நடத்திய உச்சி மாநாடுகள், உயர் மட்டச் சந்திப்புகள், கருத்தறியும் வாக்கெடுப்பு எல்லாமே பயனற்றுப்போன நிலையிலேயே தற்போது பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஐ. நாவுக்கும் அதன் பின்னணியில் செயற்படும் அமெரிக்காவுக்கு தோல்வியாகவே கருதப்படுகிறது.

பொஸ்னிய விவகாரத்தில் ஐ. நாவின் விசேட தூதுவர்களாகச் செயற்பட்ட பிரிட்டனின் முன்னாள் அமைச்சர் டாக்டர் டேவிட் ஓயன் பிரபு, றேகன் காலத்தில் அமைச்சராக இருந்த சைரஸ்லான்ஸ் ஆகியோரின் 'வான்ஸ்—ஓயன் திட்டம்' செயலிழந்து விட்டது.

கடைசியாக நடந்த ஜெனிவா முத்தரப்புப் பேச்சுக்களும் இது வரை பலன் எதனையும் அளிக்கவில்லை.

பொஸ்னியப் பிரச்சினையில் அமெரிக்காவினதும் ஐரோப்பிய நாடுகளினதும் தலையீடு நிலைமையை மேலும் மோசமாக்கினவே தவிர முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு எதனையும் அளிக்கவில்லை.

### சோமாலியா

சோமாலியாவில் பட்டினி நிலையை நீக்கி அரசு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தலையிட்ட அமெரிக்கா தற்போது சோமாலியாவில் இருந்து மெதுவாக நழுவிக் கொள்ள முயற்சித்து வருகிறது சோமாலியாவில் உள்ள ஐ. நா. படைகளுக்கு தலைமை வகிக்கும் அமெரிக்கப்படை வீரர்கள் இந்த வருடம் ஏப்பிரல் மாதம் முற்றாக வாபஸாகி விடுவர் என்று கிளின்டன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

மொஹமட் பரா அய்டீட்டுக்கும் அலி மஹ்டி மொஹமட்டுக்கும் இடையில் அதிகாரப்போட்டி ஏற்பட்டு சோமாலியாவில் பெரும் பட்டினி நிலை ஏற்பட்டசமயம் அமெரிக்க சோமாலியாவில் தலையிட்டது, ஆனால் அய்டீட்டின் படையினர் ஐ. நா. படையினருக்கு எதிராக தாக்குதலை ஆரம்பித்ததினால் நெருக்கடி புதிய உருவம் எடுத்தது.

ஐ. நா. படைகளினால் அய்டீட்டை கைது செய்யவும் முடியவில்லை. அதே சமயம் சோமாலியாவில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவும் முடியவில்லை. இந்த நிலையில் அய்டீட்டுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது ஆனால் ஐ. நா. படைகள் முதலில் சோமாலியாவில் இருந்து வெளியேற வேண்டும் என்று அய்டீட் கோரிவருகிறார். எந்த வித தீர்வும் இன்றி சோமாலியாவில் இருந்து அமெரிக்கா வெளியேறுமேயானால் வியட்நாம் போன்று சோமாலியா மற்றும் ஒரு தோல்வி எனலாம்.

### ரஷ்யா

சமீபத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யெல்ட்சினுக்கு ஆதரவான ரஷ்ய சோய்ஸ் கட்சி தோல்வி அடைந்துள்ளது. யெல்ட்சினின் சீர்திருத்தங்களை எதிர்த்து வரும் லிபரல் ஜனநாயகக் கட்சி தனித்து கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதே சமயம் தனது புதிய அரசமைப்புக்கு மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கு நடத்திய சர்வசன வாக்கெடுப்பில் யெல்ட்சின் வெற்றி பெற்றுள்ளார். விரும்பிய நேரம் நாடாளுமன்றத்தைக் கலைப்பது உட்பட பல அதிகாரங்களை புதிய அரசமைப்பு ஜனாதிபதிக்கு அளிக்கிறது.

ஆகவே நாடாளுமன்றத் தேர்தலில் யெல்ட்சின் ஆதரவுக் கட்சியான ரஷ்ய சோய்ஸ் கட்சி தோல்வி கண்டிருப்பதால் மீண்டும் ரஷ்ய நாடாளுமன்றத்துக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் 'லடாய்' ஏற்படப்போகிறது.

இப்படியான ஒரு நிலை முன்வரும் ஏற்பட்டு எதிர்ப்பாளர்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றும் நிலை உருவாகிய போதே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. அதிலும் யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருப்பது ரஷ்யாவில் அரசியல் நெருக்கடி தொடரும் ஆபத்தை உருவாக்கி இருக்கிறது.

யெல்ட்சின் இன்னும் மூன்று ஆண்டுகள் — அதாவது 1996 ஆம் ஆண்டு வரை பதவியில் இருக்கப் போகிறார். நாடாளுமன்றத்துடன் ஓர் இணக்கத்துக்கு வந்தால் மட்டுமே அவரினால் பிரச்சினை இன்றி ஆட்சி செய்ய முடியும்.

### ஹெய்ட்டி

கரிபியன் தீவான ஹெய்டியில் ஆட்சி செய்யும் லெப். ஜெனரல் செட்ராஸை அடிபணியவைக்க அமெரிக்கா விதித்த பொருளாதார முற்றுகையினால் பெரிதாக பலன் எதுவும் ஏற்படவில்லை.

பதவி விலகி ஜீன் பேர்ட்றண்ட் அரிஸ்ரைட்டிடம் ஆட்சியை ஒப்படைப்பதாக லெப். ஜெனரல் செட்ராஸ் தெரிவித்து வருகிறார். ஆனால் அதிகார மாற்றல் ஏற்படுவதில் தாமதம் நிலவிவருகிறது.

1991ஆம் ஆண்டு லெப். ஜெனரல் செட்ராஸினால் பதவி கவிழ்க்கப்பட்ட ஜீன் பேர்ட்றண்ட் அரிஸ்ரைட் தற்போது அமெரிக்காவில் தங்கி உள்ளார்.

கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் 1993 அக்டோபர் 30ஆம் திகதி அதிகாரமாற்றத்துக்கு லெப். ஜெனரல் செட்ராஸ் இணங்கி இருந்தார்.

ஆனால் "அக்டோபர் 30" காலக்கெடு கழிந்தும் இன்னும் அதிகாரமாற்றம் ஏற்படவில்லை. ஜின் பேர்ட்றண்ட் அரிஸ்ரைட் ஹெய்ட்டி திரும்புவதற்கான சூழ்நிலையும் ஏற்படவில்லை.

**சஞ்சரன்**

★

## தி.மு. கழகத்திலிருந்து செல்வராஜ் வெளியேற்றம்

சென்னை, ஜன. 1

தி. மு. க. வின் சட்டப் பேரவை கட்சித் தலைவர் திரு. ஏ. செல்வராஜ் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார் என கட்சியின் பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை தி.மு.க. வின் மற்றும் ஒரு உறுப்பினரான பரிதி இளம்வழுதி பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவிடம் கையளித்தார்.

இதற்கிடையில் திரு. செல்வராஜ் கட்சியின் ஒரே அதிகாரபூர்வ உறுப்பினராகத் தொடர்ந்து இருப்பார் என திரு. வை. கோபாலசாமி பேரவைத் தலைவருக்கு அனுப்பிய மற்றொரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த இரு கடிதங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து திரு. செல்வராஜ் தி. மு. க. வில் இருக்கிறாரா அல்லது இல்லையா என்பது குறித்து அறிவிப்பதாக திரு. சேடப்பட்டி முத்தையா நேற்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

தி. மு. க. வுக்கு சட்டப் பேரவையில் இரு உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ-த)

## வன்னிப் பகுதி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 1

வன்னி மாவட்டக் கல்விக் கழக ஆசிரியர்களுக்கான பிரயாண ஒழுங்கு நாளை மேற்கொள்ளப்படவிருப்பதால் சகல கல்விக் கழக ஆசிரியர்களையும் நாளை காலை 10 மணிக்கு முன்பதாக கல்விக் கழக பணிமனையில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

UNIVERSAL — FOR GOD AND COUNTRY

யூனிவேர்சல்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

புதிய வகுப்புகள் ஆரம்பம்
09-01-1994 காலை 7.30 மணி
✲ 05 - 01 - 94இற்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- அதிபர்
(சி-6876)

வியாபாரிகள், பண்ணையாளர்கட்கும், எமது ஆதரவாளர்கட்கும்
இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்களுக்கு தேவையான
பிறிமா கோழித்தீன், மாட்டுத்தீன்
மற்றும் பிறிமா பண்ணை உணவுகட்கும்
கால்நடை மருந்துப் பொருள்களுக்கும்
மாலவன் வர்த்தக நிலையம்
MALAVAN TRADE CENTRE
138, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
பிறிமா கோழிக்குஞ்சு வகைகள், பிறிமா கால்நடை உணவுப் பொருட்கள், எவ்வளவு தொகையானாலும் யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் ஒழுங்கு செய்து தருகின்றோம். உடனடியாக எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.
(28714)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
மேலைப்புலோலி விநாயகர் தரும நிதிய நிறுவனர் திரு. ஆ சி முருகுப்பிள்ளை 'அறத் தமிழ்' காவலர்' அவர்கள் இவ்வாண்டின் தேசாபிமானியாகத் தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்படுவதனை எண்ணி அகமகிழ்வதுடன், பெரியாரின் நற்பணிகள் மேன்மேலும் வளர இறையருள் வேண்டிப் பிரார்த்திப்பதுடன், பெரியார் நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு வாழ்கவென மேலைப்புலோலி மக்கள் சார்பாக,
சதாவதானி கதிரவேற்பிள்ளை
சனசமூக நிலையத்தினர்-வாழ்த்துகின்றனர்.
(28712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கனகம்மா முருகேசு

காரைநகர் அல்லின் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட கனகம்மா முருகேசு காரைநகரில் காலமானார். இவர் கந்தப்பு முருகேசுவின் (சொக்கலிங்கம்) அன்பு மனைவியும், சரோஜலட்சுமி. சிவநாதன், சந்தானலட்சுமி, உருத்திரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், தனலட்சுமி, லோகாம்பிகை, கனகசிங்கம் (காரைநகர் M. P. C. S) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரை சரஸ்வதியின் அன்பு மைத்துனியும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கீழ்காணும் முகவரியில் அன்னாரின் மறைவையொட்டிய துக்கம் இன்று (1 - 1 - 1994) கொண்டாடப்படும்.

தகவல்:
மு சிவநாதன்
(மகன்)

கம்பனை அம்மன் வீதி,
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
(28715)

## சின்னத்தம்பி செல்லையா

இளைப்பாறிய ஆசிரியரும், கேணியடி வீதி, மீசாலைமேற்கைச் சேர்ந்தவருமாகிய சி.செல்லையா சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நீலாம்பிகை, மகேஸ்வரி (மகளிர்மகா வித்தியாலயம் சாவகச்சேரி), சண்முகசிங்கம் (நிதி உதவியாளர், தென்மாராட்சிக் கல்விக் கோட்டம்), கருணாகரன்(வரணி, இயற்றாலை அமெ. மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு.நா.கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய கிராம சேவகர்), இந்துமதி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளி, சுஜன், வினோபாபு, சத்தியபாபு, பிரியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார், அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01-01-94) அன்னாரது இல்லத்தில் ந.ப.12 மணிக்கு நடைபெறும்.

தகவல்
நா கணபதிப்பிள்ளை
(மருமகன்)
(28713)

## சண்முகநாதன் ஸ்ரீதரன்

புங்குடுதீவு கிழக்கு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது 71/9 சீனியர் லேன் (கலட்டி) யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் தங்கராசம்மாவின் அன்பு மகன் ஸ்ரீதரன் 31 - 12 - 93 இல் காலமானார்.

அன்னார் சிவகாமசுந்தரி, தனபாலசிங்கம் (சரண்யா ரெக்ஸ், யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (ஆசிரியை புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம்), சந்திரமோகன் (சரண்யா ரெக்ஸ், யாழ்ப்பாணம்), அரவிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருளையா (சிறாப்பர் கச்சேரி, யாழ்ப்பாணம்), சுமணதேவி (கால்நடை வைத்திய அதிகாரி பேராதனை), தில்லைநாதன் (ஆசிரியர், கொழும்பு), அன்பரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1 - 1 - 94) பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்;
கு. சண்முகநாதன்
(தந்தை)

71/9, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(28717)

## திருமதி இரத்தினம் மயில்வாகனம்

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி இரத்தினம் மயில்வாகனம் 31 - 12 - 93இல் காலமாகிவிட்டார். இவர் கந்தையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலம் சென்ற தம்பிப்பிள்ளையினதும் செல்லம்மாவினதும் மகளும், திருமதி ஞானமணி பாக்கியதுரை (திருகோணமலை), க. ம. இராஜேந்திரன் (ஓய்வு பெற்ற கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்-தற்போது கணக்காளர் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை),ம.தேவராசா(கொழும்பு), திருமதி தவமணி பரராஜசிங்கம், ம. இரவீந்திரன் (நூல் நிலையம் பட்டினசபை மானிப்பாய்) ம. பாலேந்திரன் (ஈழநாடு யாழ்ப்பாணம்),ம.செல்வச்சந்திரன்(முகாமையாளர் பல. நோ. கூ. சங்கம் யாழ்ப்பாணம்), ம. பாஸ்கரன் (பிரதேசசபை ஆனைக்கோட்டை) ம. இராகினி (ஆசிரியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ம. விவேகச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வ. பாக்கியதுரை (மீன்பிடி கட்டட திணைக்களம் திருகோணமலை), இ. வசந்தா, மா. பரராஜசிங்கம் (மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்), பா. இரஜினி, செ. வேணி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், பிரவீனா, கோபினா, குமணா, ஆர்த்திகன், தர்சிகா, அஜெந்தன், துவாரகா, தாரணி ஆகியோரின் அன்புப பேர்த்தியும். த. இராசதுரை (மக்கள் வங்கி பிரதான வீதி யாழ்ப்பாணம்), திருமதி ந. மகிழ்மலர் (கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று(01 - 01 - 94) சனிக்கிழமை சங்குவேலி தெற்கு மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 12 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க ம. இராஜேந்திரன்
(மகன்)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(28702)

## திருமதி தங்கம் தாமோதரம்பிள்ளை

மானிப்பாய் சோதிவேம்படி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி தங்கம் தாமோதரம்பிள்ளை காலமாகி விட்டார் இவர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், கனகசபை, நாகேந்திரன் [சுவிஸ்], சிவலிங்கம், மனோரஞ்சன், முத்துக்குமாரசாமி [குஞ்சன்], தெய்வேந்திரன் [ அவுஸ்திரேலியா], திருமதி சரஸ்வதி காராளசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், காலஞ்சென்ற சண்முகராசா, பொன்னம்பலம் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை 1 1.94 பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்
தா. மனோரஞ்சன்
[மகன்]

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்
[28716

---

40 லட்சம்---

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு என்றும் செல்லச்சாமி மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் தொண்டமானின் பலத்தை பயமின்றி எதிர் கொண்ட ஒரேயொரு தலைவர் என்ற வகையில் தமது செல்வாக்கை மேலும் உறுதிப்படுத்தும் வாய்ப்பு ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கிடைத்துள்ளதாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

நிலைமை எப்படியிருப்பினும் —

இ.தோ.கா. பிளவுபடுவது சிங்கள மக்களுக்கு தேனாக இனிக்கும் ஆனால் பிளவு காரணமாக தோட்டத்தொழிலாளர் மத்தியில் உள்ள தீவிரவாதக் குழுக்கள் விடுதலைப் புலிகளுடன் இணையும் சாத்தியம் உண்டாகவும் கூடும். இது ஏற்கனவே பேசப்பட்டு வருகிறது—இவ்வாறு பி.பி.ஸி, மேலும் குறிப்பிட்டது.

[உ-எ-6]

நாளைய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையை ஆராய்ந்து ஒருமுடிவை எடுத்த பின்னர் அம்முடிவை அங்கீகாரத்துக்காக தேசிய சபை முன் நாம் வைக்கவேண்டும்.

இ. தொ. கா. வுடன் 44 ஆண்டுகளாக நான் பணியாற்றி வந்துள்ளேன். 27 வருடகாலம் அதன் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறேன்.

தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் நலன்களுக்காக நாம் இருவரும் எம்மை அர்ப்பணித்துள்ளோம். அந்த வகையில் இ.தொ.கா. மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகியோரின் நலன்களைக் கருத்திற்கொண்டு எனது யோசனையை நீங்கள் ஏற்க வேண்டும்.

மலையகத்தில் தாங்கள் தற்போது நடத்திவரும் தொடர் கூட்டங்களை நிறுத்தவேண்டும். இக் கூட்டங்கள் பிரச்சினைகளை ஆழமாக்குவதுடன் விரும்பத்தகாத விளைவுகளையும் ஏற்படுத்தும்.

மத்திய மாகாணசபையின் அந்த 7 அங்கத்தவர்களையும் ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள் என்று அவர்களை நாம் விசாரிக்க வேண்டும். அதன் பின்னரே அவர்கள் கட்சி ஒழுங்கு விதிகளை மீறிவிட்டார்களா என்பதை நாம் முடிவுசெய்யவேண்டும்.

அவர்களைத் தூற்றுவது நிலைமையைக் கையாளுவதற்குரிய வழி அல்ல.

மத்திய மாகாணசபை விஷயமாக இ.தொ.கா. வின் தேசிய சபை திட்டவட்டமான தீர்மானம் ஒன்றை எடுக்காததால், மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி அந்த ஏழு உறுப்பினர்களுக்கும் பணிப்புரை வழங்கப்படவில்லை.

— இவ்வாறு திரு. செல்லச்சாமி தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

(இ-எ)

## தேவை

நல்ல தரத்தில் உள்ள பொற்றோல் என்ஜின் ஒக்ஸ்போர்ட் கார் அவசரமாகத் தேவை. என்ஜின் இல்லாது 'பொடி' (Body) மட்டும் இருந்தாலும் போதுமானது.

தொடர்பு கொள்க:
33/1,
கைலாசபிள்ளையார்
மேற்கு வீதி,
நல்லூர்.

---

## புத்தாண்டே வா!

எங்கள் துயரம் நீங்கி இன்பம்
பொங்கும் வாழ்வே மலர்ந்து மண்ணில்
எங்கும் அமைதி நிலவும் நிலையே
தங்கும் வண்ணம் செய்புத் தாண்டே!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## வெற்றிதரும் ஆண்டே!

துன்பங்கள் யாவும் தூரத்தே செல்ல
துயருறும் மக்கள் துயரங்கள் அகல
இன்பத்தில் எல்லோரும் இனிதுடன் திகழ
இனிவரும் நாட்களே இதந்தனை அளிப்பாய்
குண்டுமழை கொண்டெமை அழிக்கின்ற கொடியோர்
குவலயத்தில் இருந்துமே அழிந்திடல் வேண்டும்
தொன்று தொட்டு நாம்ஆண்ட ஈழமண்ணை
வென்றிடவே வழிசமைப்பாய் வெற்றிதரும் ஆண்டே!

—அரியாலையூர் ஐ. குமாரதாசன்

## புதுயுகம் மலரட்டும்!

சோதனைகள் அனுபவித்தோம் போதுமினி
தொண்ணூற்றி நாலே துயர்தீர்க்க வேண்டும்
வேதனைகள் தீர்த்தே தமிழருக்கு
விடிவொன்று படைக்க வேண்டும்
பாதகரின் செயலொழிந்து தமிழருக்கு
பாங்கான வாழ்வு வேண்டும்
சாதனைகள் மிக்க புலிவீரர் யுகமொன்று
தனி அரசாய் ஈழத்தில் மலரவேண்டும்.

— காரைநகர் எம். பி. அருளானந்தன்

## குழாய்க் கிணறு அமைக்க 1இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி நகரசபையின் 1994 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 1 இலட்சம் ரூபாவும், சாவகச்சேரி பஸ் நிலையத்தை திருத்தி அமைப்பதற்கு 5 இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திக்காக மட்டும் 247 இலட்சத்து 77 ஆயிரத்து 100 ரூபா ஒதுக்கப்டுள்ளது.

மேற்படி வரவு செலவுத் திட்டத்தில், அடுத்த ஆண்டின் உத்தேச மொத்த வருமானம் 334 இலட்சத்து 88 ஆயிரத்து 300 ரூபா என்றும் உத்தேச மொத்த செலவீனம் 334 இலட்சத்து 74 ஆயிரம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-117)

தயும் மகனும்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நித்திரையில் பாம்பினால் கடியுண்டு வீறிட்டு அழுத சமயம் இதனை அறியாது தாயார் எழுந்து மகனைத் தேற்ற முயன்றபோது மகனைக்கடித்த அதே பாம்பு தாயாரையும் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மழைவெள்ளம் காரணமாக விஷப்பாம்புகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் படையெடுப்பதாகக் கூறப்படுகிறது. (இ-117-17)

துன்பத்தின்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் விடுக்கும் செய்தியாதெனில் உலக குடும்ப சமூகத்தின் சமாதானம், எமது ஒவ்வொரதும் குடும்பத்தில் நிலவும் சமாதானத்தாலேயே உருவாக்கப்படுகிறது என்பதாகும் எனவே இவ்வாண்டு குடும்பங்களுக்கென சிறப்பாக ஒதுக்கப்பட்ட ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குடும்பங்கள் தமது பாரம்பரிய விழுமியங்களைப் பேணிக்காப்பதன் மூலம் சமாதானத்தின் தூதுவர்களாகவும் செயலாற்றலாம் எனவும் சிந்திக்க அழைக்கப்படுகிறோம்—என்று உள்ளது.

(அ-க)

தென் மாகாண---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து வைத்தார்.

எனினும் அதனை எதிர்ந்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தொடங்கொட முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

அவர் பதவியேற்ற வைபவத்தில் பொலீஸார் சுட்டதில் பொதுமக்கள் கொலையுண்டனர்.

ஆரம்பம் தொடக்கமே பிரச்சினையிலும் இழுபறியிலும் இருந்த தென் மாகாண சபை இப்போது கலைக்கப்பட்டுவிட்டது. (அ-எ-6)

## NEW ENGLISH ACADEMY

82, பருத்தித்துறை வீதி.
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

### SPECIAL ENGLISH CLASSES

★ SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆரம்பம்: 03 — 01 — 1994 காலை 10-00 மணி
★ G. A. Q. (E S.L.)
★ YEAR 11, 10, 9, 8, 7, 6.
ஆரம்பம்: 05 — 01 — 1994

தொடர்பு நேரம் காலை 9, — 12

- நிர்வாகி.

(சி- 6873)

---

## ஹொங்கொங்கின் உறுப்புகள் கலைக்கப்படும்

### சீனா அறிவிப்பு

1997 ஆம் ஆண்டு ஹொங்கொங்கின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் அங்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்புகள் அனைத்தையும் கலைத்து விடப் போவதாக சீனா அறிவித்துள்ளது.

இதனால் ஹொங்கொங்கிற்கான வருங்கால அரசியல் அமைப்புச் சட்டத்தை சீனா மீறுகிறது என்று ஆளுநர் கிறிசி பட்டென் சீனாவைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் உள்ளூராட்சி சபைகளும், சட்டசபைகளும் கலைக்கப்படும் என்றும் அதிகாரபூர்வ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க)

## புத்தாண்டில்...

ராஜன்ஸ் தரும் புத்தம் புது நிகழ்ச்சி

யாழ், ரமணனின்

**ராஜன்ஸ்**

இசையில்

**சசந்தன்**

முதன் முறையாக இணைந்து பாட்டிசைக்க

ராஜன்ஸ் படைக்கும்

**இன்னிசைப் பொங்கல்**

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

இசைச்சுவை

"சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்"
தங்கவேல் செல்வராஜா குழுவினரின்
சிரியுங்கள் சிந்தியுங்கள்
★ நகைச்சுவை ★
மாஸ்டர் கஜேந்திரனின் ஓர்கன் இசை

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி
காலம்: 14 — 01 1994
நேரம்: பி. ப. 2-30, மாலை 7மணி
டிக்கெற்: 100/- 50/-

நிகழ்ச்சி சிறக்க மணிக்குரல் வாழ்த்துகின்றது

ஒறிஜினல் கொம்பக்ட் டிஸ்க்கில் பாடல் பதிவு செய்யவும் பாடல் பதிவு நிலையங்களுக்கு தேவையான மாஸ்டர் பிரதிகள் மற்றும் நவீன கமெரா மூலம் வீடியோ படப்பிடிப்பிற்கும் —

யாழ். நகரில் —

**ஷண் ரெக்கோடிங் ஸ்பொட்**

வைரவர் கோவில் அருகில்,
நவீன சந்தை உட்புறம்.

● தற்போது பாடல் பதிவுகள் 3 நாட்களில் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

[28707]

# மரண அறிவித்தல்

## பி சே. கிறிஸ்தோப்பர்

(முன்னாள் சுங்கலாகா லிகிதர்; ஊர்காவற்துறை)

கரம்பொன் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட பி. சே. கிறிஸ்தோப்பர் அவர்கள் 31.12 93 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற திருமதி கிறிஸ்தோப்பர் மேரியோசேப்பிறாவின் (சின்னத்தங்கச்சி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருள்சீலி றோஸ்மலரினது அன்புத் தந்தையும். இமல்டாராணி, கிறிஸ்ரியேசுராசா (மில்க்வைற் தொழிலகம்), கு. இராஜேஸ்வரி, கொலின் தேவராஜா (ஊ பி சபை), அன்ரனி ராஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சேவியர், குணநாயகம் (ப.நோ.கூ.சங்கம் ஊர்காவற்துறை), மரியகிறிஸ்ரீனா (பேபி உடுப்பிட்டி), திருமதி. ஆ கொ. தேவராசா (நீதிமன்றம் ஊர்காவற்துறை), ஜமுனா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 2.1.94 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கலட்டி அம்மன் கோவில் வீதி இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா கோவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
கி கி. யேசுராசா
[மகன்]

60,கலட்டி அம்மன் கோவில் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.
[28711]

---

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

எம்மிடம்

அரிசி ஆலைக்கு தேவையான

வெனர றபர் றோலர், NO I அல்லர் கத்தி

மற்றும் பெயின்ற் வகைகள், கிறீஸ், நோலிக் மல்றி பொன்ட் பசை,

வீடியோ, ஓடியோ கசற் வகைகள், ஆங்கில மருந்து வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். வி. முருகேசு

இல. 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(28663)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் ... இலக்கத்திலுள்ள ... 01 01 1994 இல் ... வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org